உ

தமிழ்ப் பொழில்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத் திங்கள் வெளியீடு.

துணர்: க. குரோதன-மாசி, பங்குனி. மலர்: கக, கஉ.

உ

இளவேனிற் காலத்து இன்பமாலை.

திருநாவுக்கரசராம் செம்பொருட்செல்வர் இறைவன் திருவடி நீழலின் இணையிலாப் பேரின்பத்திற்கு ஓர் உவமையாக எடுத்துக் கூறிய பெறலரும் பெருஞ்சிறப்பு வாய்ந்தது 'இளவேனிற் காலத்து இன்பமாலை' யாகும். இளவேனிற் காலத்தே மாலைப்போழ்திலே, பூம்பொய்கைக் கரையிலே, நிலாவெளியிலே, வீணைநலம் பெற்றிருத்தலின் விஞ்சிய இன்பம் ஒன்று இன்மையானன்றே, இதனையே அப்பேரின்பிற்கு உவமையாக நம் அரசு, நம் வாழ்வு, நம் செல்வம் எடுத்துரைப்பதாயிற்று. இக்கூறிய மாலையின்பத்தினை யொப்ப மற்றோர் இன்பம் உளதாயின் அது:—

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே!

என்னும் செந்தமிழ்ப் பாடலாம் தீஞ்சுவையமிழ்தமேயாகும். இத்திருப்பாட்டின்கண், கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புல இன்பங்களுள், பின்னே சலிப்பும் அல்லலும் உடைமையாற் சிறிது குறைவுபடும் ஊணின்பினை விட்டு, ஏனையின்பங்களையே என்றுஞ்சலியாத இறைவனடி யின்பத்திற்கு ஒப்பிட்டிருக்கும் பேரழகு நோக்குவார் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுவதாகும்.

இனி, இங்ஙனம் உயர்நலங்கனிந்த இளவேனில் மாலை இன்பினை நாளும் துய்த்தற்குரிய நாம், அதன் தனிச் சிறப்பினை நாவாரப் போற்றினல்லது நன்றியறிவேம் ஆவேமா? ஆனால் ஒன்று : முனை இளஞாயிறு முதல் விழுஞாயிறுவரை உளதாகும் **வெய்யில்** எனும் **பாராச் சேவகன்** ஒருவன் ஒழியுங்காறும், நாம் அவ்வின்பத்தினைப் பெறமுடியாமல் நெடிது காத்திருத்தல் இவ்வேனிலினிடத்துச் சார்வதாகிய ஒரு பெருங்குறையே. ஆயினும், 'கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த-ஒன்றுநன் றுள்ளக் கெடும்' என்னும் திருமறையின்படி, இப்பேரின்பினைப் பெறுவேம் ஆகிய நமக்கு அக்குறையினை மறந்து இளவேனிற் சிறப்பினைப் போற்றுதலே கடனாகும்.

இவ்விளவேனிலின்பம் உலகில் வேறு எந்த நாட்டினும் எய்தப் பெறாததாய், இத்தமிழகத்தே மட்டும் எய்தப்பெறுவ தாகிய ஒரு சிறப்பின்பம் ஆகும். இவ்விளவேனிற் கண்ணே பெறலாகும் **தென்றலாகும்** தீஞ்சுவை யமிழ்தினை விண்ணாட்டி னரும், உலகத்து வேறு எந்நாட்டினரும் தம் நாட்டிலிருந்து பெறுதல் இயலாததன்றே! நம் நாட்டுப் பூம்பொய்கைகளிற் பொலிந்து விளங்கும் திருமகளும் மருமகளுமாகிய இருமகளிர் இருக்கைகளை, மூவுலகிலும் காணுத லியையாதே! இங்ஙனம் பிறவற்றிற்கில்லாத தனிப்பெருஞ் சிறப்பினையே புலவர்கள் வீறு என்பர். இத்தகைய வீறு என்ற சொல்லாம் அடையுடன் இவ் விளவேனிற் காலத்தின் அழகினைப் புலவர் பெருமானாகிய **சேரமான் பெருங்கடுங்கோன்** தாமியற்றிய பாலைக்கலியில் **வீறு சால் ஞாலத்து வியலணி** என மொழிந்துளார். இதற்கு உரை கண்ட உச்சிமேற்புலவர் கொள் **நச்சினார்க்கினியர்** 'வேற்று நாட்டிற்கில்லாத-உலகத்து அகற்சியையுடைய-அழகு' என்று எழுதியிருத்தல் நோக்கத்தக்கது.

இவ்விளவேனிற் செவ்வியை எடுத்துரையாத புலமைச் செல்வர்கள் பண்டுமிலர்; இன்றுமிலர். இளவேனில் மணம் வீசப்பெறாத நூல்கள் எங்குமில்லை; என்றுமில்லை. இவ்விள வேனிற் செவ்வியையும், இன்னும் ஏனைக் காலங்களின் செவ் வியையும் எடுத்தியம்பும் பாட்டுக்கள், பாட்டின்பகுதிகள் ஆகிய

இவற்றினைத் திரட்டின், அது ஒரு தனிப்பெரு நூலாகும். உரைநடையில் விரிப்பின், ஒவ்வொரு காலப்பகுதியும் ஒவ்வொரு தனி நூலாகும். எனினும், இதுபோது, கருத்திற்கெட்டிய இளவேனில் மாலை இன்பம் குறித்துக் கைக்கெட்டிய சில நூல்களிற் கண்ணிற்கெட்டிய சில பொருள்களே கூறப்பெறுகின்றன

பண்டைக் காலத்தே, மக்கள், இவ்வேனிற் காலந்தொடங்கவே, தாம் தாம், ஊரகத்தும், ஊர்ப்புறத்தும் இருந்து ஆற்றி வந்த பல்வகை அரிய அலுவல்களினின்றும் ஓய்வுபெற்று, மனைவி மக்களுடன் ஒருங்குகூடி, விழாக்களும், திருமணமும் முதலா மின்பக் கொண்டாட்டங்களிற்றிளைத்து மகிழ்ந்திருப்பர். தமிழ்த் தெய்வவிழாவாம் தனிப்பெரும் விழாவும் இந்திரவிழா முதலிய ஏனைத் தெய்வவிழாக்களும், முதற்பெருங் கடவுளர்க்கு இயற்றும் திருவிழாக்களும் இக்காலத்தேதான் கொண்டாடப் பெறுவன. தமிழ்த் தெய்வ விழாவாவது அவ்வவ்வாண்டுகளிற் புலவர்கள் ஆங்காங்கிருந்து இயற்றிவரும் அரியநூல்கள், செய்யுட்கள் முதலியவற்றின் இன்சுவை விருந்தினைப் பற்பல புலவர்களும் செல்வர்களும் பன்னாள் ஒருங்கிருந்து கூட்டுண்டு மகிழ்தலேயாகும். இது, இவ்விளவேனிற் காலத்திலேயே நிகழுமென்பது

"நிலனாவிற் றிரிதரூஉம் நீண்மாடக் கூடலார்
புலனாவிற் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுதன்றோ"

என்னும் பாலைக்கலியானும், 'நிலத்தினுள்ளார் நாவிலே வழங்கும் நீண்டமாடங்களையுடைய மதுரையிலுள்ளார், அறிவினையுடைய சான்றோர் நாவிற் பிறந்த கவிகளின் புதுமையைக் கொண்டாடும் இவ்விளவேனிற்காலமல்லவோ..............என்ற அதன் இனிய உரையானும், பிறவற்றானும் அறியப்படும்.

இக்காலத்தே நிகழும் இந்திரவிழா என்பது பெரியதோர் விழா. இது சித்திரைத் திங்கள் சித்திரை நாளில் முழுமதியில் தொடங்கப் பெறுவது. இருபத்தெட்டு நாள் நிகழுவது. இவ்விழா நிகழ்ச்சியின்விரிவெல்லாம் சிலப்பதிகாரம், மணிமேகலையாய இருபெருநூல்களானும் அடியார்க்கு நல்லார் உரையானும் அறியப்படும். முதற்கடவுளராகிய பிறவா யாக்கைப்

பெரியோன் கோயில், நீலமேனி நெடியோன் கோயில் முதலாய வற்றுக்கும் திருவிழாக்கள் நான்மறை விதிப்படி நடக்கும் காலமும் இதுவேயாகும். இவற்றின் விரிவெல்லாம் பின்னர் எழுதப் பெறும். இளவேனிற் பருவமே, மக்கள்-திருமணம், நீராட்டு, பொழிலாட்டு, உண்டாட்டு முதலிய மகிழ்ச்சிகளைத் திளைத் திருப்பதற்குரிய காலம். பொருள் தேடற்குப் பிரிந்து செல்லு வார்க்குப் பொதுவாக வேனில் உரிய காலமாகவும், இளவேனிற் செவ்வி அவர்களை அவ்வாறு செல்லாமல் தடுத்துவிடுதலும், முதுவேனிலும் அதன்பின்னுள்ள காலங்களும் அவ்வாறு தடுக் கும் சிறப்புப் பெருமையும் ஏதுவாக, இளவேனில் இறுதியில் முதுவேனிற் றொடக்கத்தேதான் பொருள்வயிற் பிரிவார் பிரிந்து செல்லுவர். இதனைக் கலித்தொகை முதலிய பண்டைநூல்களால் உணரலாகும். மேலும், இளவேனில் பொருள்வயிற் பிரிந்தார் மீண்டுவருதற்குக் கூடமைப்பட்ட காலம் அன்றாகவும், பொருள் வயிற்பிரிவார் அக்காலத்தே மீண்டு வந்துவிடுவதாக உறுதி கூறிச் செல்லுதலும், அங்ஙனம் கூறிச்சென்றார் வாராது சிறிது தாழ்ப்பினும், பிரிந்திருக்கும் தலைவி முதலியோர் எதிர்நோக்கி வருந்தி நிற்றலும் மேற்கூறிய நூல்களான் இனிது உணரலாகும் இத்தகைய சிறப்பினதாகிய இளவேனிற் செவ்வியை நூல்கள் எவ்வாறு பாராட்டுகின்றன எனச்சிறிது பார்ப்போம். முதற்கண் கற்றறிந்தோர் ஏத்தும் கலியை எடுத்துக்கொள்வாம்.

வளங்கள்.

இக்காலத்தேதான் மரங்களும் செடிகளும் புதுத்தளிர்களை ஈன்று அழகு பெற்று விளங்குவனவாகும். மிக்க மழையும், மிக்க நீரும் பெற்ற கார், கூதிர், பனிக்காலங்களிலும் மரங்கள் இங்ஙனம் தளிர் ஈன்று புத்தழகுபெற்று விளங்குதல் இல்லை. தம் இலைதழைகளை வேண்டியோர்க்கு வரையாது அளித்துவந்த தின் பயனாக இக்காலத்தே புதுத்தளிர்களைப் பெற்று மிளிர் கின்றன என்று பாலைக்கலி இப்புது அழகினை வாயாரப் புகழ் கின்றது. இதனை

"ஈதலிற் குறைகாட்டாது அறனறிந் தொழுகிய
தீதிலான் செல்வம்போல் தீங்கரை மரம்நந்த"

என்ற அழகிய அடிகளானும், 'கொடுத்தற் றொழிலிடத்துப் பொருட் குறைகாட்டாமற் கொடுத்து, இல்லறம் நிகழ்த்தும் முறைமையை அறிந்து நிகழ்த்திய தீவினையில்லாதவனுடைய செல்வம் மிகுமாறுபோல, இனிதாகிய நீரையுடைய ஆற்றங் கரையில் மரங்கள் தழைக்க' என்ற அதன் இனிய உரையானும் அறியலாகும்.

இங்ஙனம் தழைத்துப் பொலிந்தமரங்கள் பின்னர் அரும்பி மலருங்காட்சி அதனினும் சிறந்ததாகும். அம்மலர்களில் வண்டுகள் அமர்ந்து தேனைப்பருகி இனிதுமிழற்றியிருத்தல் அதனினும் சிறந்ததாகும். அம்மலர்களிற் படிந்துபடிந்து அவற்றின் மணங்களை வாரிக்கொண்டுவந்து வீசிச்செல்லும் தென்றல் அதனினும் சிறந்ததாகும். இவ்வினிமைகளைக்கண்ட பாலைக்கலியுடையார், உள்ளம் சோம்புதலில்லாத ஒருவன் செல்வம் பெருகுதல்போல அம்மரங்களில் பூக்கள் மிகும். அங்ஙனம் முயன்றுபெற்ற ஒருவன்சுட்டத்தை ஒருமுபற்சியுமின்றி உண்ணுமுரியார் பலர்போன்று வண்டுகள் தேனையுண்டு ஆரவாரித்திருக்கும் என்னும் கருத்தில்

"மடியிலான் செல்வம்போல் மரனந்த, அச்செல்வம்
படியுண்பார் நுகர்ச்சிபோற் பல்சினை மிஞிறார்ப்ப"

என்று அழகுபெறப்பாடிவைத்தனர். இங்ஙனம்வண்டு பூக்களில் அமர்ந்து தாதாடித்தேனுண்டு மகிழ்ந்திருத்தலை முன்னே தவம் செய்துவைத்தார் பின் அத்தவப்பயனைப் பெற்றிருத்தல்போலும் என்றார். இதனை

அருந்தவம் ஆற்றியார் நுகர்ச்சிபோல் அணிகொள
விரிந்தானச் சினைதொறூஉம் வேண்டும்தா தமர்ந்தாடிப்
புரிந்தார்க்கும் வண்டு......... எனக் கூறிச்செல்வர்.

இன்னும் அவர் இப்பூக்களின் பலவகை நிறங்களையும் உற்று நோக்கி, நெருப்பின் உருவை யொப்ப இலவம் பூப்பதும், பொரியின் உருவையொப்பப் புன்குகள் பூத்து உதிர்வதும், கோங்கம் பூக்கள் பொன்போன்று தாதைச் சொரிவதும் ஆகிய அழகினைக் கண்டு

"எரியுரு வுறழ இலவ மலரப்
பொரியுரு வுறழப் புன்குபூ வுதிரப்
புதுமலர்க் கோங்கம் பொன்னெனத் தாதூழ்ப்ப"

என்றெல்லாம் பாடிச்செல்கின்றனர். இம்மட்டோ! அம்மரங்களுள் பூங்கொத்துக்கள் நிரம்பிய வெண்கடம்பு பலராமனையும், அரும்புகள் அலர்ந்த செருந்தி ஞாயிற்றினையும், வண்டுகள்மொய்த்துச்சூழ்ந்த காஞ்சி காமனையும், நன்னிறமுடையபூக்கள் நெருங்கின ஞாழல் (புலிநகக் கொன்றை) சாமனையும், பூத்த இலவம் பரமசிவனையும் ஒத்துக் காணப்பெறும் என்னும் கருத்தில்

ஒருகுழை ஒருவன்போல் இணர்சேர்ந்த மராஅமும்
பருதியஞ் செல்வன்போல் நனையூழ்த்த செருந்தியும்
மீனேற்றுக் கொடியோன்போல் மிஞிறார்க்குங் காஞ்சியும்
ஏனோன்போல் நிறங்கிளர்பு கஞலிய ஞாழலும்
ஆனேற்றுக் கொடியோன்போல் எதிரிய இலவமும்

என்றுகூறி, நோக்குவார்க்கெலாம் மகிழ்வூட்டுவாராயினர். இன்னும், பலராமனைப்போலும் மலர்ந்த வெண்கடம்புகளில் அழகிய மயில்கள் ஒரு நெறிப்படச்சூழ்ந்து அமர்ந்திருந்தல், அப்பலராமன் துளசிமாலையினை அணிந்திருத்தல் போலும் என அரிய வுவமை கூறினர்.

அது

'கொடுமிடல் நாஞ்சிலான் தார்போல் மராத்து
நெடுமிசைச் சூழு மயிலாலுஞ் சீர'

என்பதாகும்.

ஆற்றங்கரையிலுள்ள மரங்கள் பல நிறைய்ப்பூத்து நாளாயினமையின், பழபூக்கள் அந்த ஆறு மறைய உதிர்ந்து கிடக்கும் செவ்வியை இவ்வாசிரியர் கண்டுரைத்திருப்பது மிக வியக்கத்தக்கது. ஆறுகள் உயிர்கட்கெல்லாம் வாழ்க்கையைத் தருமாறு தன் செல்வமாகிய வெள்ளநீரைப் பல கால்வாய்கள் வழியாக ஊட்டி, ஒரு காலத்தே அப்பெருக்குக் குறைந்து நிற்கும் நிலையில், அதன் நீரைப்பெற்று வளமுற்ற கரைமரங்கள் அவ்வுதவியை மறவாது அவ்வாறுகள் அழகுபெறும்படியாகப் பல மலர்களைச் சொரிந்து நிற்கும் என்ற பொருளில்,

மன்னுயிர் ஏமுற மலர்ஞாலம் புரவின்று
பன்னீராற் பாய்புனல் பரந்தூட்டி யிறந்தபின்
சின்னீரான் அறல்வார, அகல்யாறு கவின்பெற
முன்னொன்று தமக்காற்றி முயன்றவர் இறுதிக்கட்
பின்னொன்று பெயர்த்தாற்றும் பீடுடையாளர்போற்
பன்மலர் சினையுகச் சுரும்பிமிர்ந்து வண்டார்ப்ப
இன்னமர் இளவேனில் இறுத்தந்த பொழுதினன்

என்று படிக்கப் படிக்கத் தெவிட்டாதபடி பாடிவைத்தனர்.

பல நூல்களையும் ஒருங்கு கற்றுவருவோர் அங்கிலையில் அடையும் செருக்கு, தெளிவின்மை முதலிய குறைகளை அடைதல் போன்று பெருகித் திமிர்ந்துவரும் வெள்ளம், அன்னவர் யாவும் கற்றுத் தீர்ந்தபின் அவற்றின் கருத்துக்களைச் சுருக்கி யுணர்ந்து தெளிந்துநிற்றல் போலத் தெளிந்த அறல் நீராக ஓடிவரும் ஆற்றின் செவ்வியும், அங்ஙனமே தெளிந்துநிற்கும் குளங்களின் செவ்வியும் இவ்விளவேனிற்கே உரிய சிறப்பாகும். ஒரு தெளிந்த குளத்தில், தாமரை குவளை முதலிய பூக்கள் நிறைந்திருப்பது ஆற்றுப் பெருக்கானது தான் விளைவித்த நாட்டின் எழிலினைப் பலகண்கள் கொண்டு பார்ப்பதுபோலத் தோன்றும். கரையிலுள்ள முருக்கின் இதழ்கள் தெளிந்த நீருள் வீழ்ந்து தோன்றல் பளிங்கு மணியை யொக்கும் கண்ணாடிக்குள்ளே பவளம் வைத்திருப்பதுபோற் றோன்றும். நீர்க்கரையிலுள்ள மரப்பூக்களிற் படிந்திருக்கும் வண்டுகள் கீழ்நீரில் தம்மையும் தாமிருக்கும்பூக்களையும் தெளிவுபெறக்கண்டு, தம்மிடத்தைவிட்டு நீர்ப்பரப்பில் பறந்து ஆரவாரித்துக்கொண்டிருக்கும். இத்தகைய நீரின் தெளிவாய சிறப்பினை

“ வீறுசால் ஞாலத்து வியலணி காணிய
யாறுகண் விழித்தபோற் கயம்நந்திக் கவின்பெற
மணிபுரை வயங்கலுள் துப்பெறிந் தவைபோலப்
பிணிவிடு முருக்கிதழ் அணிகயத் துதிர்ந்துகத்
துணிகய நிழனோக்கித் துதைபுடன் வண்டார்ப்ப
மணிபோல அரும்பூழ்த்து மரமெல்லாம் மலர்வேய

என்றுகூறிச் செல்வாராயினர்.

இங்ஙனம் கலித்தொகையில் இளவேனிலின்பங்குறிக்கும் இனிய பகுதிகள் இன்னும் பல வாகும். நூற்றைம்பது கலிப் பாட்டுக்களுள், பத்தின் மேலாய முழுப்பாட்டுக்களும், சில பாட்டின் பகுதிகளும் இவ்விளவேனிலின் பல்வகையான இன்பங்களை எடுத்துரைப்பன வாயின், கலித்தொகை இவ்விளவேனிற்குத் தந்துள முதன்மையை என்னென்பது!

இனி, இவ்விளவேனிற் சிறப்பினைச் சிலப்பதிகாரம் எங்ஙனம் எடுத்தியம்புகின்றதெனச்சிறிது நோக்குவாம். சிலப்பதிகாரத்தின் கதை நிகழ்ச்சி இன்பப் பகுதி துன்பப் பகுதி யென இருவகைப்படும். கோவலன் மாதவியைப் பிரிதல் வரையுள்ள முற்பகுதி இன்பப்பகுதியாம். ஏனைப்பகுதிகள் எல்லாம் துன்பப் பகுதியாகும். கோவலன் கண்ணகியொடு மகிழ்ந்திருந்த காலம் சில ஆண்டுகள் ஆகும். இதனை எடுத்துரைக்கப்புக்க நூலாசிரியர் அவ்விருவரும் ஓர் இளவேனிற் காலத்தே உயர்நிலைமாடத்தே மகிழ்சிறந்திருந்த செவ்வியை எடுத்துரைத்த அளவானே அமைந்து இவ்வாறு 'ஆண்டு சில கழிந்தன'என முடிக்கின்றனர். இக்கூறிய சில்லாண்டினுள்ளும் இவர் தம் மகிழ்ச்சியின் பேரெல்லையைக் காட்டி நிற்பது ஓர் இளவேனில் மாலையேயாயின், இதன் சிறப்பினை என்னென்பது! இக்காலத்துப் பூக்களின் செவ்வியையும், வண்டின்இசையையும், தென்றலினிமையும் எடுத்துவைத்து

கழுநீ ராம்பல் முழுநெறிக் குவளை
யரும்புபொதி யவிழ்ந்த சுரும்பிமிர் தாமரை
வயற்பூ வாச மளைஇ, யயற்பூ
மேதகு தாழை விரியல்வெண் டோட்டுக்
கோதை மாதவிச் சண்பகப் பொதும்பர்த்
தாதுதேர்ந் துண்டு, மாதர்வாண் முகத்துப்
புரிகுழ லளகத்துப் புகலேக் கற்றுத்
திரிதரு சுரும்பொடு; செவ்வி பார்த்து
மாலைத் தாமத்து மணிநிரைத்து வகுத்த
கோலச் சாளரக் குறுகண் ணுழைந்து,
வண்டொடு புக்க மணவாய்த் தென்றல்
கண்டு மகிழ் வெய்தி........என்றெல்லாம் கூறிச் செல்கின்றனர்.

இதனுள் சுரும்பும், வண்டும், தென்றலும் ஆம்பல் குவளை தாமரை முதலாய பூக்களின் தாது மணங்களையுண்டுவந்து, இசைத்தும் உற்றும் இன்பம் தருதலை அடிகள் இனிது எடுத்துரைத்தலே இவ்விளவேனில் மாலைச் செவ்வியை இனிது புலப்படுத்தா நிற்கும்.

இனி, மாதவியின் ஆடல் பாடல் முதலாய நலங்களில் ஈடுபட்ட கோவலன் அம்மாதவியொடு மகிழ்சிறந்திருந்த காலம் பல ஆண்டுகள் ஆகும். இதனை அடியார்க்கு நல்லார் உரையான் உணரலாகும். இப்பல ஆண்டுகளினும் கோவலன்-மாதவி மகிழ்ச்சிகளை எடுத்துரைக்கவேண்டும் ஆசிரியர் அம்மகிழ்ச்சியின் பேரெல்லையாக ஈண்டும் ஓர் இளவேனில் மாலையின்பினையே எடுத்துக் காட்டியுள்ளார். அடிகள்,

காதலர்ப் புணர்ந்தோர் களிமகிழ் வெய்த
குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு
மழலைத் தும்பி வாய்வைத் தூத
அறுகாற் குறும்பெறிந்து அரும்புபொதி வாசம்
சிறுகாற் செல்வன் மறுகில் தூற்ற......
அந்தி வானத்து வெண்பிறை தோன்றிப்
புன்கண் மாலைக் குறும்பெறிந் தோட்டிப்
பான்மையிற் றிரியாது பாற்கதிர் பரப்பி
மீனரசாண்ட வெள்ளி விளக்கத்து
... ...
ஆர்வ நெஞ்சமொடு கோவலற் கெதிரிக்
கோலங்கொண்ட மாதவி

என்று இனிதெடுத்துரைத்துச் செல்கின்றனர்.

ஓரிடத்து இச் சிலப்பதிகாரம் இவ்விளவேனிலை வாயாரப் போற்றி வரவேற்கின்றது. இதன் வருகையை

செந்தா மரைவிரியத் தேமாங் கொழுந்தொழுக
மைந்தா ரசோக மடலவிழக்—கொந்தார்
இளவேனல் வந்ததால்!

என்று மகிழ்வோடு எடுத்துரைக்கின்றது. இவ்வேனிலகத்து வீசும் சிறுகாற்செல்வனை கையேந்தி யணைத்து உச்சிமோந்து

உலப்பிலா மகிழ்ச்சியொடு அதன் அளப்பருஞ் சிறப்புப் பாராட்டு கின்றது. வானுறவோங்கிய பொதியிலின் நறுமணப் பூக்களை யளைந்துவரும் இத்தென்றல் மதுரைமாநகரத்துப் புகுந்து, அங் குள்ள பல்வகை மணங்களையும் கொண்டதனோடு அமையாமல், புலவர் செந்நாப் புகழையும் ஏந்திவரும் செவ்வியை உள்ளவா றறிந்து போற்றியது இச் சிலப்பதிகாரம் ஒன்றேயாகும் இதனை

மலயத் தோங்கி மதுரையின் வளர்ந்து
புலவர் நாவிற் பொருந்திய தென்றல்!...... என்றும்

புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பில்
பொதியிற் றென்றல் போலா தீங்கு
மதுரைத் தென்றல் வந்தது!...... .... என்றும்

பலபடப் பாராட்டுகின்றது.

இவ்விளவேனிற் செவ்வியை இழந்து, மீண்டும் இது வருங் காலம் யாதென ஏக்கற்றிருப்பார் கருத்தினை உணர்ந்துகொண்டு,

கோதை மாதவி கொழுங்கொடி யெடுப்பக்
காவுங் கானமுங் கடிமல ரேந்தத்
தென்னவன் பொதியிற் றென்றலொடு புகுந்து
மன்னவன் கூடல் மகிழ்துணை தழூஉம்
இன்னிள வேனில் யாண்டுளன் கொல்! லென்று
உருவக் கொடியோர் உடைப்பெருங் கொழுநரொடு
பருவம் எண்ணும் படர்தீர் காலை...... என்று

எடுத்துரைத்திருப்பது பாராட்டத் தக்கதன்றே!

சுருங்கக் கூறின் இவ்விளவேனிற் செவ்வியை இச்சிலப்பதி கார நூல் புகார்காண்டமாகிய முதற்பெரும் பகுதி முழுவதும் பாராட்டுவதனோடு அமையாது, பிறண்டும் உற்றுழி உரைத்துச் செல்லுகின்றது. இவற்றால் இந்நூல் இவ்விளவேனில் மாலைக்கு அளித்திருக்கும் முதன்மை இனிதறியப்படும்.

இனி, மணிமேகலை நூலார் இவ்விளவேனின் மாலையினை எங்ஙனம் பாராட்டுகின்றனர் எனச் சிறிது நோக்குவாம். இந் நூல், முழுவதும் துயர் விரவிவரும் ஒரு துயர்முடிவு நூலாகும். இக்காப்பியத் தலைவியாய மணிமேகலையை அடுத்து முதன்மை

பெறும் உதயகுமரன் என்னும் அரசிளங்குமரனின் செயலில் ஒரு பகுதி மட்டில் இவ்வப் பகுதியாம். அஃதாவது அவன் ஒரு வனத்தின்கண் காப்பியத் தலைவியைக்கண்டு தன் விருப்பினை எடுத்துரைக்கும் பகுதியேயாகும். இவ்வின்பப் பகுதிக்கு உரிய காலமாக நூலாசிரியர் இவ்விளவேனில் மாலையினையே எடுத்துக் கொண்டனர். நூலாசிரியர் இவ்விளவேனிற் காட்சியை மக்கட்கு மகிழ்வளித்தலில் இணையின்றி நிற்கும் ஒரு நாடக நிலைக்கு ஒப்பாக வைத்து எடுத்துக்காட்டியிருப்பது மிக்கதோர் மகிழ்ச்சியை விளைவிப்பதாகும். அவர் இந்நாடகத்திற்குப் பல வகைப் பூக்களும் பூத்து விளங்கும் பூஞ்சோலையாகிய திரையினை முதற்கண் விடுகின்றனர்.

குரவமும் மரவமும் குருந்துங் கொன்றையும்
திலகமும் வகுளமும் செங்கால் வெட்சியும்
நரந்தமும் நாகமும் பரந்தலர் புன்னையும்
பிடவமுந் தளவமும் முடமுட் டாழையும்
குடசமும் வெதிரமும் கொழுங்கா லசோகமும்
செருந்தியும் வேங்கையும் பெருஞ்சண் பகமும்
எரிமலர் இலவமும் விரிமலர் பரப்பி
வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே

என்று மொழிவாராயினர். இனி அந்நாடகம் நிகழும் இடம் பசும்பட்டு விதானித்த பெரியதோர் கொட்டகையன்றே! அது

பருதியஞ் செல்வன் விரிகதிர்த் தானைக்கு
இருள்வளை வுண்ட மருள்படு பூம்பொழில்—என்றும்,

வெயில்நுழை பறியாக் குயில்நுழை பொதும்பர்

என்றும் பொழிலை அமைத்துப்பாடினர். இனி அதற்குக் குழல் இசையும், யாழ் இசையும் செய்வார் வேண்டுமன்றே! அவ் விசைகள்பற்றி

குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய......என்றார்.

இந்நாடகத்திற்கு ஆடுவோராக மயிலினைக்கூறினர். அடுக்கு மேடைகளிலிருந்து காண்போராக மரக்கிளையமர்ந்த மந்திகளைக் கூறினர். தனி இருக்கைகள் அமைந்த பள்ளத்திருந்து காணும்

மிகு திருவினராகப் பூம்பொய்கைகளிற் பூவகத்தமர்ந்த அன்னங்களைக் கூறினர். முழவொலிப்போராகச் சம்பங் கோழிகளைக் கூறினர். பாடுவோராகக் குயில்களைக் கூறினர். இவற்றை

மயிலா டரங்கின் மந்திகாண் பனகாண்!
மாசறத் தெளிந்த மணிநீ ரிலஞ்சிப்
பாசடைப் பரப்பிற் பன்மல ரிடைநின்று
ஒருதனி யோங்கிய விரைமலர்த் தாமரை
அரச வன்னம் ஆங்கினி திருப்பக்
கரைநின் றாலும் ஒருமயில் தனக்குக்
கம்புட் சேவற் கனைகுரல் முழவாக்
கொம்பர் இருங்குயில் விளிப்பது காணாய்!

என்று கூறிச் செல்வாராயினர்.

இங்ஙனம் தன்பால் வரும் இன்பப் பகுதியை, இளவேனிற்கே உரித்தாக்கிச் செல்லுவதால் மணிமேகலை இவ்விளவேனிற்குத் தந்திருக்கும் முதன்மையை என்னென்பது!

இனி, இவ்விளவேனில் இவ்வின்பங்களையெல்லாம் திரட்டி ஓரிடத்துக்கூறும் இறையனார் அகப்பொருள் நூலார், "சந்தனமும், சண்பகமும் தேமாவும் தீம்பலவும் ஆசினியும் அசோகமும் கோங்கும் வேங்கையும் குரவமும் விரிந்து, நாகமும் திலகமும் நறவமும் நந்தியும் மாதவியும் மல்லிகையும் மௌவலொடு மணங் கமழ்ந்து, பாதிரியும் பாவைஞாழலும் பைங்கொன்றையொடு பிணியவிழ்ந்து, பொரிப்புன்கும் புன்னாகமும் முருக்கொடு துதை சிறந்து, வண்டறைந்து, தேனார்ந்து, வரிக்குயில்கள் இசைபாட, தண்தென்றல் இடைவிரா"வும் என இதன் சிறப்பினை நூலின் உயிர்நிலைக்களனாய ஓரிடத்து இனிதெடுத்து இயம்பினர்.

(தொடரும்)

இதழாசிரியர்.

ஒரு பெரும் மகிழ்ச்சி.

நமது சங்கத்தலைவரவர்கள் மக்கட் பொதுநல அலுவல்களிற் பல்லாண்டுகளாக உழைத்து வருதலும், இதனை நன்கு உணர்ந்த மக்கட்பரப்பினர் பலரும் இவர்கள்பால் பெருநன்மதிப்புடையராகிப் பொதுநலக் கழகங்களில் உறுப்பினராகவும் தலைவராகவும் தேர்ந்தெடுத்து வருதலும் யாவரும் உணர்வர். தஞ்சை நாட்டாண்மைக் கழகத்தில் ஏறத்தாழ ஐந்தாறு ஆண்டுகளாகத் தலைவராக நின்று இடையறாது உழைத்து வருதலை உணர்ந்த அக்கழக உறுப்பினர்கள் அவர்கட்கு ஓர் உருவப்படத்திறப்பு விழா குரோதன, பங்குனி, உஅ (10—4—26) நாளன்று கொண்டாடினர்கள். அதுபோது, தஞ்சை மாநாட்டாண்மைக் கழக உறுப்பினர்களும், தஞ்சை நகரத்து உயர்நிலைத் திருவினர்களும் பிறருமாகப் பலப்பலர் கூடினர். தஞ்சை மாநாட்டின் நீதிமன்றத் தலைவர் (Dt. Judge) திருவாளர் P. C. லோபோ அவர்கள் (Bar-at-law) தலைமை ஏற்றனர். தஞ்சைமாநாட்டாண்மைக் கழகத்தலைவர் திருவாளர் **A. T.** பன்னீர்ச்செல்வம் அவர்கள் (Bar-at-law) நம் சங்கத்தலைவரவர்களின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தனர். பின்னர் அவைத் தலைவர் அவர்களும் அங்ஙனமே சங்கத்தலைவரவர்கள் பெருமையினை எடுத்துரைத்து உருவப்படத்தைத் திறந்துவைத்தனர். சங்கத்தலைவரவர்கள் சின்மென் மொழியால் யாவருக்கும் தம் வணக்கத்தினையும் நன்றியறிவினையும் தெரிவித்தனர்.

தமிழ்த்தாய்க்கும், தமிழன்பர்களுக்கும் பெரும் பற்றுக்கோடாகி மிளிர்வது தஞ்சைமாநாட்டாண்மைக் கழகமும், தஞ்சை நாட்டாண்மைக் கழகமுமாகும். இவ்விரு கழகங்களின் தலைவர்கள் இங்ஙனம் தமிழ்மக்களாற்போற்றிச் சிறப்பிக்கப்பெறுதல் முற்றும் பொருந்துவதேயாகும். இத்தஞ்சைமாநாட்டில் நிலவும் இவ்விருவர்கள் (உமா—செல்வம்) ஆட்சி நெடிது இனிது நிலவுவதாக!.

தூய தமிழ்த்தொண்டும் தோமில் பொதுத்தொண்டும்
மேய தமதுயர்வா மேவினர்-ஆயபிறை
அன்ன உமா—செல்வத் தாட்சி இனிதோங்க
மன்னு சிறப்பெல்லாம் வாய்ந்து!

இதழாசிரியர்.

உ

சர். சிவஞானமும், தமிழ்ப் பல்கலைக் கழகமும்.

(சர். சிவஞானம் அவர்கள் கூறுவது.)

" தமிழ்ப் பல்கலைக்கழக மேற்படுத்த வேண்டு மென்பதில் நான் ஈடுபட்டு முயன்றுவருகின்றேன். சில பொய்யான கூற்றுகள் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவைகளை நீக்குவதற்கு இத்தருணத்தை நான் எடுத்துக் கொள்கின்றேன். முதலில் ஆங்கிலம் இந்தியா முழுவதற்கும் பொதுமொழியாயிருப்பது போன்று, இம்மாகாணத்தில் தமிழ்நாடு முழுவதும் தமிழேதான் பொதுமொழியாயிருக்க வேண்டுமென்பதே எனது உண்மையான கொள்கை. இது தான் எனது உறுதியான கொள்கை. இதை நான் மறைவாய் வைத்துக்கொண்டிருக்கவில்லை. தாய்மொழி வழியாகவே முன்னேற வேண்டுமென நான் எனது நண்பர்கட்கெல்லாம் கூறிவருகின்றேன். 1926-ம் ஆண்டு சனவரிமாதம் 23-ந்தேதியன்று அதைப்பற்றி யோசிக்க நாம் கூடியபோது என்னைப் போலவே பலரும் இவ்விடயம் தமிழருக்கே உரிமையுடையதாயும் முக்கியமானதாயுமிருப்பதினால் அதை ஒரு தீர்மானமாக வைத்துக்கொள்வது வேண்டியதல்லவெனக் கருதினர். அதையும் ஒரு தீர்மானமாக வெடுத்துக் கொள்ளவேண்டுமென ஆவலாயிருந்தவர்களெல்லாம் முதலில் என்னிடம் கேட்டிருப்பார்களாயின், அதையும் நான் மற்றைய இனங்களுடன் சேர்த்து வைத்திருப்பேன். ஆனால் நாங்கள் பாதி வேலைகளை முடித்த பின், இது எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அப்பால் நான் அங்கிருந்தவர்கட்கு அது புதியதோர் விடயமாயிருக்கின்றமையால், அன்றைய வேலைக்கென குறிப்பிடப்பட்டவைகள் முடியும்வரை பொறுத்திருக்க வேண்டுமென விளக்கிக் கூறினேன். நான் அவ்விதம் கூறியதுதான் வேறுவிதமாய் திரித்துக் கூறப்படுகின்றது."

'திராவிடன்'

தமிழர் வீரம்.

திருவாளர் இதழாசிரியரவர்கட்கு.

ஐயா!

இதனுடன் அனுப்பி யிருக்கும் "தமிழர் வீரம்" என்னும் கட்டுரையைத் தங்கள் தாளில் வெளியிட வேண்டுகின்றேன். இக்கட்டுரையின் இறுதிப்பகுதியில், புலவர்கள் மறுக்கத்தக்க பொருள்களும் விரவிவரும். அவற்றையெல்லாம் தாங்களே பார்த்துக் கீழே குறிப்பெழுதும் உரிமையுண்டு. அன்றியும், "இக்கட்டுரைக்காரரின் எண்ணங்களுக்குப் பத்திரிகையும், சங்கமும் உடன்பாடுடையவல்ல" என்று குறிப்பெழுதிக்கொள்ளலாம். தயவுசெய்து என் எண்ணத்தைத் மாற்றுமல் எல்லாவற்றையும் அப்படியே வெளியிட வேண்டுகின்றேன்.

இங்ஙனம், அன்பன், சிதம்பரன்.

தமிழர் வீரம்.

வீரம் என்பது தனதுபகைவரைவென்று வெற்றிபெறுதல் மட்டும் அன்று. தான்தொடங்கிய வேலைகளுக்கு எத்துணை இடையூறுகள் நேரிட்டாலும் அவற்றைச் சிறிதும் பொருட்படுத்தாமல் நிறைவேற்றுதலும் வீரமாகும்; தனது கொள்கைகளை விட்டுக்கொடுக்காமல், நிறைவேற்றுதலும் வீரமாகும்; தன் மனச் சான்றுக்கு மாறின்றி உள்ளதை உள்ளவாறு மொழிதலும், உண்மையாக நடத்தலும் வீரமாகும். புத்தர்பெருமான் அறவுரைகளில் "போர்க்களத்தில் முன்வைத்தகாலைப் பின்வைக்காமல் பகைவருடன் எதிர்த்துப் போர்புரியும் வீரனைவிடத் தனது கொள்கைகளை, எத்துணை இடையூறு நேரினும் அஞ்சாது நிறைவேற்றுவோனே சிறந்த வீரனாவான்" என்னும் உயரிய நன்மொழி காணப்படுவதும் இதற்கொரு சான்றாகும். மற்றும் ஐம்புலன்களையும் அடக்கியாளுகின்றவன் எல்லோரினும்

சிறந்த வீரனுவான். ஒவ்வொரு புலனும் ஒவ்வொரு யானைக்கு ஒப்பாகும். யானையை அடக்கியாளுதற்கு ஆற்றல் வேண்டுமென்றோ? ஒரு யானையை அடக்கி நடத்துவதற்குப் பாகன் ஒருவனும், அவனுக்குத் துணையாக இரண்டொருவரும் வேண்டியிருக்க, ஐந்து யானைகளை ஒருவன் அடக்கியாளுவானுயின் அவனைச் சிறந்த வீரனென்று கூறுதற்கு ஐயம் யாதுளது? பாகன் யானையை அங்குசத்தால் அடக்கியாளுதல்போல ஒருவன் ஐம்புலன்களாகிய யானைகளை அடக்கியாளுவதற்கு அங்குசம் அறிவாகும். அறிவாகிய அங்குசத்தால்தான் ஐம்புலன்களாகிய யானைகளை அடக்கியாள இயலும். ஐம்புலன்களை யானைகளுக்கு ஒப்பாகக் கூறலாமென்பதையும், அவற்றை அடக்குவதற்கு அங்குசம் அறிவே என்பதையும், அடக்கியாளுவோன் சிறந்த வீரனுவான் என்பதையும் "**உரன் என்னுந் தோட்டியான் ஓர்ஐந்துங் காப்பான்**" என்னும் தமிழ் மறைமொழியால் அறியலாம்.

இவ்வாறு புலன்களை அடக்கியாளுவோரே சிறந்தவீரர்கள் என்பதையும், அவர்களுக்கு உலகமுழுதும் அடங்கி நிற்கும் என்பதையும், விண்ணுலகம் முதலியவற்றில் உறையும் இமையவர் தலைவன்முதலியவர்களும் அவர் ஆற்றலுக்கு எதிர்நிற்கமாட்டார் என்பதையும்,

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி. (குறள்-25)

என்ற அருமைத் திருக்குறளால் அறியலாம். இவ்வாறு ஐம்புலன்களையும் அடக்கியாண்டவீரர்கள் பலர் நம்தமிழ்நாட்டிற் பண்டைநாளில் உறைந்தனர். அவர்களையே அந்தணர் என்றும், சான்றோர் என்றும், ஆன்றோர் என்றும், முனிவர்கள் என்றும், நமது தமிழ்நூல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. அவர்களிற் சிலரைப்பற்றிப் பின்னர்க் கூறுகின்றேன்.

பண்டைக்காலத்தில் நமது நாட்டில் உறைந்து, இன்றளவும் அழியாப் புகழை நிலைநிறுத்திச் சென்றவர்களாக, குறுநிலமன்னர் பலருளர்; பெருநிலமன்னர் பலருளர். தம் எண்ணத்தை

அஞ்சாது எடுத்துரைக்கும் வீரப்புலவர் பலர் இருந்தனர். பெண்மக்களாகிய வீரர்கள் பலர் இருந்தனர். அவர்கள் வரலாறுகளை யெல்லாம் கூறுவதென்றால் எனது ஒரு நாவா லியலாது. எழுதுவதென்றால் ஒவ்வொருவரைப்பற்றியும் ஒவ் வொரு தனி நூல் எழுதலாம். ஆதலால் சிலர் வீரச்செயல் களைமட்டில் இக்கட்டுரையில் சுருக்கக்கூறி முடிக்கின்றேன்.

தமிழ் வீரர்கள் பலரைக் கண்டறிய வேண்டுமாயின், புற நானூறு என்ற பெயரோடுகூடிய தமிழ்ப்படைவீடு ஒன்றிருக் கின்றது. அங்கே சென்று உற்று நோக்குவீர்களாயின், முடி யரசர்களாகிய பலவீரர்களைக் காணலாம்; குறுநிலமன்னர் களாகிய பல வீரர்களைக் காணலாம்; வீரப்பெண்மணிகள் பலரைக் காணலாம்; வீரப்புலவர்கள் பலரைக் காணலாம்; தான் தொடங்கிய வேலையை உயிர்கொடுத்தும் நிறைவேற்றிய வீரர்கள் பலரைக் காணலாம்; மாற்றலரை மடியச்செய்து புகழ் படைத்த வீரர்கள் பலரைக் காணலாம்; கொடையிற் சிறந்த வீரர்கள் பலரைக் காணலாம்; உள்ளதை உள்ளவாறே அஞ்சாது எடுத்துரைத்த வீரர்கள்பலரைக் காணலாம். மற்றும் சிலப்பதி காரம், மணிமேகலை முதலிய செந்தமிழ் நூல்களைத் துருவி நோக்கினால் தமிழ் வீரர்கள் பலர் கிடைக்கின்றார்கள். இனி அவர்கள் வீரச்செயல்கள் சிலவற்றை ஆராயத்தொடங்குவோம்.

குமணன் என்னும் பெயரினையுடைய குறுநிலமன்னன் வீரச்செயலை உற்றுநோக்குவோம். இவன் கல்வியறிஞர்களாகிய புலவர்களுக்கு, இல்லையென்று கூறாமற் கொடுத்தல் வேண்டு மென்னும் உறுதியான கொள்கையை யுடைய வீரனாக இருந் தான். இக்குமணன், தன் பின்னோனாகிய இளங்குமணனால் அரசினை இழந்து வனம் நண்ணி வதிவானாயினன். அதுகாலை, பரிசில்பெறக்கருதிக் குமணனைநாடிவந்த 'பெருந்தலைச்சாத்தனார்' என்னும்புலவர் அவனைக் காட்டிற்கண்டார். அவனது இரங்கத் தக்கநிலையை யறியாதவராய், வேட்டைக்காக வந்திருத்தல் கூடுமெனவெண்ணித் தனது குறையைக்கூறி இரந்தார். அப் பொழுது தமிழ்வீரனாகிய நமது குமணவள்ளல், பரிசிலளிக்கப்

பொருள் இல்லாதவனுயிருந்தாலும், தன்னிலிடச் சிறந்த பொருள் பிறிதொன்று இன்மையால், தன்தலையைக் கொள்ளுமாறு தனது உடைவாளைப் புலவர்கையிற் கொடுத்துத் தலைகுனிந்து நின்ருன். இதுதான் தமிழர் வீரத்தின் உயர்வாகும் இதனைப் பெருந்தலைச்சாத்தனுரே இளங்குமணனிடம் சென்று பின்வருமாறு கூறியிருக்கின்ருர்.

ஒ இளங்குமணனே! யான் "கெடாத நல்ல இசையை யுடையவனும், வெற்றிபொருந்திய வலிமையான குதிரையை யுடையவனும், பெருமையிற் சிறந்த தலைவனும் ஆகிய குமணனைக்கண்டு, எனது வறுமை தோன்றப்பாடி நின்றேன். உடனே குமணன், பெருமையையுடையவனும், பரிசில்பெறத் தகுதி யுடையவனுமாகிய இப்புலவன், பரிசில் பெருமல் வினைத வருந்திச் செல்லுதல், எனது நாட்டையிழந்ததைவிட எனக்குப் பெருந்துன்பத்தைத் தரும் என்று கூறித் தன் தலையை எனக்குத் தருவதற்காக வாளை எனக்குக்கொடுத்தான். தன்னிலிடச் சிறந்தபொருள் வேறென்று இல்லாமையால் தன்னையே எனக்குக் கொடுக்கத்துணிந்தான். யான் வெற்றி யுடனும், அளவற்ற மகிழ்ச்சியுடனும், விட்டுக்கொடுக்காத உறுதியான கொள்கை யையுடைய நினதுமுன்னேனைக் கண்டு வருகின்றேன்" என்று கூறுகின்ருர். இதனை:-

கேடில் நல்லிசை வயமான் தோன்றலைப்
பாடி நின்றனெனென் ஆகக்; கோன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தல்என்
நாடுஇழந் த(அ)தனினும் நனிஇன் னு(து)என
வாள்தந் தனனே தலைஎனக்(கு) ஈயத்;
தன்னில் சிறந்தது பிறி(து) ஒன்று இன்மையின்;
ஆடுமலி உவகையோடு வருவல்,
ஒடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே.

(புறநானூறு–165)

என்னும் பாடலால் அறிக.

பெருந்தலைச் சாத்தனர் என்ற மற்றொரு புலவரும் நமது குமணவள்ளலாகிய வீரன் புகழை விரித்துரைத்திருக்கின்றார். இவன் புகழ் முழுவதும் கூறுவதென்றால் மிக விரியும் என அஞ்சி இவ்வளவோடு நிறுத்துகின்றேன். இக்குமணன் வீரத் தன்மையைப் பாருங்கள்! தனது நாட்டையிழந்தும், தான்பெற்றிருந்த எல்லா நலங்களையுமிழந்தும் புலவர்க்குக் கொடுத்தல் வேண்டுமென்னும் உறுதியைமட்டில் இழவாமலிருந்தான். கொடுத்தற்கு வேறுபொருள் கிடையாமையால் தனது தலையையும் கொடுக்கத் துணிந்தான். இத்தகையவீரம் நம்மாற் பாராட்டற் குரியதொன்றன்றோ? இத்தகைய செயல்களையே யான் தமிழர்வீரம் என விளம்புகின்றேன்.

இனி மற்றொரு வீரனகிய பாரி என்பவனைப்பற்றிச் சிறிது நோக்குவோம். "கொடுக்கி லாதானைப் பாரி யேயென்று கூறினுங்கொடுப் பாரிலை" என்று சுந்தரராலும் பாராட்டிக் கூறப்பெற்ற இவன் தன்மை அளவிடற்பால தாகுமோ? அஃறிணைப் பொருளாகிய முல்லைக்கொடி யொன்று படர்வதற்குப் பற்றுக்கோடின்றி வாடிக்கிடந்ததாக, அதனைக்கண்ட நமதுபாரி அதன் வாட்டந்தீர்ந்து படர்வதற்காகத் தானிவர்ந்துவந்த தேரையே கொடுத்தானுயின், இவன் எவ்வளவு இரக்கமன முடையவனுயிருந்திருத்தல் வேண்டும்? எத்தகைய கொடையாளனுயிருத்தல் வேண்டும்? இப்பாரியின் சிறப்பை, அந்தணர் குடியிற் றோன்றிய புலவர் பெருமானகிய கபிலர், பலபடியாகப் பாராட்டிக் கூறுகின்றார். இவர் பாரியுடன் இணைபிரியா நட்புடையவராயிருந்து அவன் நன்மையிற் கண்ணுங்கருத்துமாயிருந்தவர்.

இக்காலத்து அந்தணர்கள் செயலையும், அக்காலத் தமிழந்தணர்கள் செயலையும் இக்கபிலர் செயலை நுணுகியாராய்வார் தெளிவாகக் காண்பர். நமது பாரியென்னும் தமிழ்வீரன், குறுநிலக்கோமானுயினும், கொடையில்முடியுடை மூவேந்தர்களினும் முனைந்து விளங்கினன்; ஆற்றலிலோ மூவேந்தர்களும் ஒருங்கு கூடிப் பொருதும் வெல்லமுடியாத விறலையுடையவனுக விளங்கினன். இவன் வீரச் செயல்களைக் கபிலர் கூறியவற்றைக் கொண்டே காண்போம்.

ஒரு காலத்தில், பாரியின் சிறப்பைக்கண்டு அழுக்காறுற்ற சேர, சோழ, பாண்டியர்களாகிய மும்மன்னர்களும் ஒன்றுகூடித் தங்கள் படைகளைத் திரட்டிக்கொண்டுவந்து, பாரியின் உறைவிடமாகிய பறம்புமலையை முற்றுகையிடும்பொருட்டு, அம்மலையின் பாங்கருள்ள காவிற்றங்கியிருந்தனர். இதனையறிந்த புலவர் பெருமானாகிய கபிலர் மூவேந்தரையுங் கிட்டிக் கூறுகின்றார்:— ஓ மூவேந்தர்களே! "அம்மலையை அடுத்துள்ள சோலையில் மரங்கள்தோறும் யானைகளைக் கட்டியிருப்பீர்களாயினும், இடங்கள்தோறும் அளவற்ற தேர்களை நிறுத்தியிருப்பீர்களாயினும், உங்கள் போர் முயற்சியினால் பாரியினது நாட்டையும் மலையையும் கைக்கொள்ளமாட்டீர்கள்! உங்கள் வாள்வலியைக்கண்டு அஞ்சி அவன் தனது நாட்டையும், மலையையும் உங்கள்பால் விட்டுவிட மாட்டான். அவன் அரசினைக் கைப்பற்றும் வழியை நீங்கள் அறிய மாட்டீர்கள்! ஆனால் யான் அறிவேன். நீங்கள் நன்றாய் முறுக்கப்பெற்ற நரம்பையுடைய யாழை வாசித்துக் கொண்டு விரை தங்கிய அடர்ந்த கூந்தலோடு கூடிய நுமது விறலியர்கள் உங்கள் பின்னே வருமாறு, ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும் செல்லுங்கள். அவ்வாறு செல்லுவீராயின் அவன் தனது நாட்டையும், மலையையும், காலநீட்டிப்பின்றித் தருவான்" என்பதை

"ஆங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினிர் ஆயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்
தாளிற் கொள்ளலிர்; வாளில் தாரலன்;
யான்அறி குவன்அது கொள்ளு மாறே;
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தல்நும் விறலியர் பின்வர
ஆடினிர், பாடினிர், செலினே,
நாடும் குன்றும் ஒருங்கீ யும்மே.

என்ற பாடலாற் காண்க.

(தொடரும்)

சா. சிதம்பரன்.

உ

தமிழக வரலாறு.

(327-பக்கத் தொடர்ச்சி.)

தமிழகம்.

குமரிக் கண்டம்.

இவ்வுலகம் சூரியனிடத்தினின்று தெறித்து விழுந்த ஓர் பெரிய நெருப்புப்பொறி. அப்பொறி படிப்படியாய் ஆறி நீரும் நிலனுமாய்ப் பிரிந்தது. முதன்முதல் தோன்றிய நிலப்பரப்பு தற்கால மிருக்கும் தென்னிந்தியாவுடன் சேர்ந்திருந்தது. அது இந்து மகாசமுத்திரத்தில் வெகுதூரம் வரையில் வியாபித்திருந்தது. இப்பொழுதிருக்கும்ஆத்திரேலியா, சாவா, சுமத்திரா, மடகாசுகர் முதலிய தீவுகளை அது தன்னுள் அடக்கிக்கொண்டிருந்தது; * வடக்கில் விந்திய பருவதமும், தெற்கில் தென்கடலும், கிழக்கிற் சாவகத்தீவும், மேற்கில் மடகாசுகர் தீவும் எல்லைகளாக விளங்கின. அதைக் குமரிக் கண்டமென்றும் இலமூரியா என்றும், பிற்காலத்தார் வழங்கினர். அதுதான் உலகத்தில் முதன்முதல் தோன்றிய நிலம். அந்நிலத்தில் பெரும்பாகம் கடலால் அழிவுற்றது. °

குமரிக் கண்டமும் கடல் கோள்களும்.

குமரிக்கண்ட மிருந்தவிடம் இப்பொழுது நீரும் நிலமுமாய் இருக்கின்றது. அக்கண்டத்தின் நிலப்படத்தில் தென்னிந்தியாவும், ஆஸ்திரேலியாவும், இலங்கை சுமத்ரா, ஜாவா, மடகாஸ்கர் என்னும் தீவுகளும் தவிர மற்ற இடம் இப்பொழுது நீரால் வியாபிக்கப்பட்டிருக்கிறதல்லவா? நீராயிருக்குமிடத்தில் இருந்த நிலம் கடலால் மூன்றுமுறை அழிவுற்றது. % "இலங்கைத்தீவின்

* Geology of India, chapter IX. The Gondwana System P. 109.

° Imperial Gajetteer of India, P. 80, The Gondwana System.

% தமிழர்நேசன், தொகுதி VIII, பகுதி I, புறநானூற்று ஆராய்ச்சி பக்கம் 9.

சரித்திரக்குறிப்புக்களிலிருந்து மூன்று கடல் கோள்கள் அறியப் படுகின்றன. அவற்றுள் முதலாவது கி. மு. 2387-ல் அதாவது பைபிளில் குறித்த நோவாப் பிரளயத்தையொட்டி நிகழ்ந்த தெனவும், இரண்டாவது கி. மு. 450-ல் நிகழ்ந்ததெனவும், மூன்றாவது கி. மு. 203 வரையாண்ட தேவனும் பிரியதிஸ்ஸன் என்ற அரசன் காலத்தில் நிகழ்ந்ததெனவும் சொல்லப்படும். மேற்கூறிய மூன்று பிரளயங்களாலும் அழிந்தநாடு தமிழகத்தின் சம்பந்தமுடையதென அறியவேண்டும்.

தமிழகம்.

* தமிழகம் என்பது † தமிழ்நாடு அல்லது ‡ தமிழ்த்தேசம். அது ஆதியில் குமரிக்கண்டத்தோடு சேர்ந்திருந் தது. இப்பொழுதிருக்கும் தமிழ்நூல்களைக் கொண்டு அது வடக்கே திருவேங்கட மலையையும், தெற்கே குமரிமலையும், கிழக்கும் மேற்கும் கடலையும் எல்லைகளாக உடையது என நாம் அறியலாம். "வடவேங்கடம் தென்குமரி, ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்" என்பது தொல்காப்பியப்பாயிரம். தெற்கெல்லையைக் குமரியாறு என ¶ உரையாசிரியர்கள் கூறுவர். அஃது ஆறு அன்று; $ மலை என்று சிலப்பதிகாரத்தில் வரும் § "பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடு" என்னும் தொடரால் அறியலாம். (குமரிக்கோடு= குமரிமலை; கோடு=மலை.)

---

* "இமிழ்கடல்வேலித் தமிழகம்" பதிற்றுப்பத்து-2-ம் பத்து, பதிகம்; சிலப்பதிகாரம்-3:37

"வையக வரைப்பிற் றமிழகம்" புறநானூறு. 168.

† புறநா. 2-ம் பதிப்பு பக்கம் 270.

‡ சிலப். 2-ம் பதிப்பு பக்கம் 62.

¶ இளம் பூரணவடிகள், நச்சினார்க்கினியர்.

§ தொல். பாயிரவிருத்தி பக்கம், 202 (அரசஞ்சண்முகனார் எழுதியது.)

$ சிலப்-11:19, 20.

தமிழகமும் கடல் கோள்களும்.

தமிழ் நாட்டிற்குக் குமரிமலை தெற்கெல்லையாக இருந்த காலத்தில் இலங்கை இந்தியாவுடன் சேர்ந்திருந்தது. இவையிரண்டுடன் அநேக நாடுகள் சேர்ந்திருந்தன. அவையாவன :— "ஏழ் தெங்க நாடு, ஏழ்மதுரைநாடு, ஏழ் முன் பாலை நாடு, ஏழ் பின் பாலை நாடு, ஏழ் குன்ற நாடு, ஏழ் குண காரை நாடு, ஏழ் குறும்பனை நாடு, குமரி கொல்ல முதலிய பன்மலை நாடு" என்பனவாம். அவையெல்லாம் கடலால் அழிவுற்றன. அவற்றின் அழிவைக் * கலித்தொகை † புறநானூறு ‡ சிலப்பதிகாரம், $ சிலப்பதிகாரவுரை முதலியவற்ருல் அறியலாம்.

தமிழகமும் ஐவகை நிலங்களும்.

புவி காடும் மலையும் பள்ளத்தாக்கும் கடற்கரையுமான தன்மையை உடையதாகவே படைப்புக்காலத்தில் அமைந்திருந்தது. || சூரிய வெப்பத்தாலும், பலவேறு காரணங்களாலும், ¶ மக்களாலும், அவற்றுள், காடும், மலையும், திரிந்துமணற்பாங்காக மாறுதலும், பள்ளத்தாக்கும் கடற்கரையும் அவ்வாறு வேறுபடுதலும், ஒன்று மற்ருென்ருகத்திரிதலும் உண்டல்லவா? ஆகவே, புவியின் மேற்பரப்பு, காடும் மலையும் பள்ளத்தாக்கும் கடற்கரையும், மணற்பாங்குமான ஐவகைப் பாடுபாட்டினையுடையதாயிற்று. அவ்வைவகைப் பாடுபாட்டினை நம் தமிழகமும் உடையது. அவற்றிற்குப் பெயரிட்டகாலத்தில் நம் தமிழ் மக்கள் அவ்வவ்விடங்களில் இருந்த மரம் பூ என்பனவற்றையே அவ்வவ்விடங்களுக்குப் பெயர்களாக வழங்கினர். காடும் காடு சார்ந்த இடமும் முல்லைநிலமென்று பெயர் வழங்கப்பட்டன. மலையையும் மலைசார்ந்த இடத்தையும் குறிஞ்சிநிலமென்று கூறினர். பள்ளத்தாக்காகிய சமவெளிப் பிரதேசத்தை நெய்தல் நிலமென்றனர். மணற்பாங்கைப் பாலைநிலமென்று வழங்

* கலித்தொகை: முல்லைக்கலி 104. † புறநா. 6. 9. ‡ சிலப். 11: 18, 20. $ சிலப். 2ம் பதிப்பு பக்கம் 230. || சிலப். 11: 62—66.
¶ கம்பராமாயணம், பாலகாண்டம்.

கினர். இவ்வாறு முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் எனத் தமிழகத்தை நம் பண்டைத் தமிழாசிரியர் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் பகுத்தனர். அவற்றைப் பின்பற்றியே பிற்கால பூகோள நூலாசிரியர் பூமியின்மேற்பரப்பை மலைப்பிரதேசம், பீடபூமிப்பிரதேசம், சமவெளிப்பிரதேசம், கடற்கரைப் பிரதேசம், பாலைவனப்பிரதேசம் எனப் பாகுபடுத்திக் கூறுவாராயினர்.

ஐவகை நிலங்களும் தமிழ் நூல்களும்

தமிழகத்தில் அவ்வவ்விடங்களில் வாழ்ந்து வந்த மக்களின் தொழில் மணம் (விவாகம்) முதலியவற்றை அமைத்து அந்தந்த நிலப் பெயர்களாலே தனித்தனியாகப் புலவர்கள் செய்யுட்கள் இயற்றியருளினர். முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு என்பனவற்றால் அவற்றை அறியலாம். அவை முறையே முல்லை நில மக்களையும் குறிஞ்சி நிலமக்களையும் கூறுவனவாகும். கலித்தொகை என்னும் தொகைச் செய்யுள் ஐவகை நிலமக்களின் வாழ்க்கை தனித்தனி கூறு நூலாக முல்லைக்கலி, குறிஞ்சிக்கலி, பாலைக்கலி, மருதக்கலி, நெய்தற்கலி என்னும் பகுதிகளையுடையதாக இயற்றப்பட்டுளது அத் தொகைச் செய்யுளாலும், மற்றைச் சங்கச்செய்யுளாலும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தாலும் பண்டைத் தமிழ்மக்களது தொழில் இல்வாழ்க்கை ஆட்சி முதலியவற்றை அறியலாம்.

IV. பழங்கற் கருவிக்காலம்.

மக்கள்

மக்கள் எவ்விடத்தில் தோன்றினர்? தோன்றி எவ்வளவு காலமாயிற்று? என்பதைப்பற்றி பலர் பலவாறு கூறுகின்றனர். அவர்கள் கூறுவனவற்றுள் சில பொருந்துவனவாய்த் தோற்றுகின்றன; சில பொருந்தாதனவாய்க் காணப்படுகின்றன; பல நம்பக் கூடியனவாயிருக்கின்றன; எவ்வாறிருப்பினும், அவற்றை அறிந்து கொள்ளுதல் தமிழக வரலாற்றிற்கு ஏற்றதே ஆம்.

மக்கள் முதன் முதல் தோன்றியது எங்கே? * "உலகம் வெயில் மண்டலப் பகுதி, குளிர் வெயின் மண்டலப்பகுதி, குளிர் மண்டலப்பகுதி என மூன்றாகப் பகுக்கப்பட்டுளது. அவற்றுள் முதன் முதல் தோன்றியது வெயில் மண்டலப் பகுதியே என்று அறிஞர்கள் ஆராய்ந்து முடிவு செய்திருக்கின்றனர். அதை நிலை நிறுத்த அவர்கள் நிலத்தின் வன்மை நிலத்திற்றோன்றிய நிலையியற் பொருள், இயங்கியற் பொருள்களின் பன்மை, பருமை, முதலியனவாகப் பல கூறுகின்றனர். அவையெல்லாம் மெய்மையே. அதனால் வெயில் மண்டலப் பகுதியுள் அமைந்து கிடக்கும் தமிழகம் உலகத்தோற்ற முறையில் முதன் முதல் தோன்றிய நாடென்பது வெளியாம். அவ்வாறாகவே முதன் முதல் மக்கள் தோன்றியது தமிழக மென்பது ஒருதலை" † "மக்கடமை முதலளித்த மாண்புடைய தமிழ்நாடு."

மக்கள் தோன்றி பல இலக்க ஆண்டுகள் ஆயிற்றெனச் சிலரும், பத்து இலக்கம் ஆண்டுகள்சென்றன எனப்பலரும் கூறுவர். எல்லாரும் இலக்கம் ஆண்டுகளுக்குமுன் தோன்றினர் என்பதை ஒப்புவர். ஆனால் இத்தனை ஆண்டுகளுக்குமுன் தோன்றினர் என்று அளவிட்டுரைக்க ஒண்ணா; இவ்வளவு காலத்திற்கு முன் தோன்றினர் என்பதைக் கணக்கிட்டுரைக்க முடியாவிட்டாலும், இத்தனை ஆண்டுகளுக்கு முன் இருந்தனர் என்பதை அவர்கள் வழங்கிய கருவிகளால் ஒருவாறு உணரலாம்.

மக்கள் இற்றைக்கு 510000 ஆண்டுகளுக்கு முன்னமேயேஇருந்தனர் எனக்கருதப்படுகிறது. முதன்முதல் மக்கள், கருவிகள் இயற்றிக் கொள்ளத் தெரியாது காலங்கழித்து மரக்கிளைகள் மூங்கில்கள் இவற்றால் கருவிகள் இயற்றிக் காலங்கழித்துப் பின்னர்க் கற்களால் கருவிகள் இயற்றிக்கொண்டனர். கற்கருவிகள் பழங்கற் கருவிகள், புதுக்கற்கருவிகள் என இருவகைப்படும். புதுக்கற்கருவிகள் இற்றைக்கு 7000-ஆண்டுகளுக்கு முன் வழங்கப்பட்டன. பழங்கற் கருவிகளோ 20000-ஆண்டுகளுக்குமுன்

* தமிழ்ப்பொழில், துணர் 1, மலர் 1, பக்கம் 17.
† கொங்கு மண்டல சதகம், பக்கம் 9.

கையாளப்பட்டன. ஆகவே அவ்விரண்டிற்கும் இடைப்பட்ட காலம், 13000 (20000-7000) ஆண்டுகள் என ஏற்படுகிறது. புதுக் கற்கருவிக்காலத்தில் 13000 ஆண்டுகள் மக்கள்வாழ்ந்தனர் என அறியப்படுவதால், பழங்கற்கருவிகள் இயற்றிக்கொள்ளத் தெரியாது காலங்கழித்த ஆண்டுகள் சுமார் 10000 இருக்கலா மெனக் கோடல் இழுக்காகாது எனக் கருதப்படுகிறது. பழங்கற் கருவிகளுள் 500000-ஆண்டுகளுக்கு முந்தியது ஒன்று மத்திய இந்தியாவில் ஓரிடத்தில் அகப்பட்டிருக்கிறது. இவற்றால் 500000-வருடங்களுக்கு முன் கற்கருவிகள் இயற்றிக்கொள்ளத் தெரியாது மக்கள் காலங்கழித்தது 10000-ம் ஆண்டுகள் எனக் கொண்டு, மக்கள் 510000 (500000 + 10000)ம் ஆண்டுகளுக்கு முன் இருந்தனர் எனல் பொருந்துமெனக் கருதப்படுகிறது.

கருவி

மக்கள் முதன்முதல், குரங்குகளைப்போல் தங்கள் கைகளையே தங்களுக்குக் கருவிகளாய்க்கொண்டு காய் கனிகளைத் தின்று அங்குமிங்கும் அலைந்தே திரிந்தனர். புலி முதலிய விலங்குகள் மான்மரை முதலிய விலங்குகளைக்கொன்று தின்றதோடு நில்லாமல் மக்களையும் தின்னத்தொடங்கவே மக்கள் அவைகளினின்று தப்பிப் பிழைக்கக் கிளைகளையும், சிறிய மரங்களையும், பெரிய தடிகளாகக்கொண்டு அவைகளுடன் போராடிச் சில வாண்டுகள் வாழ்ந்தனர். அவர்கள் அவ்வாறு செய்யாதிருந்திருப்பின், புலிமுதலிய விலங்குகள் அவர்களைப் பெருக விடாமல் கொன்று தின்றிருக்குமென்பது ஒரு தலை. அவர்கள் மூங்கில் கொடி செடி இவற்றைக் கருவிகளாய் இயற்றத் தொடங்கி மூங்கிலை வரிச்சல்களாய்ப் பிளந்து, அவற்றை வளைத்துக் கொடியாற்கட்டி அதில் பெரிய முட்செடியை அம்பாய்த் தொடுத்தும், சிறிய மரங்களையும், கிளைகளையும் பெரிய தடிகளாய்க் கொண்டும் விலங்குகளைக் கொன்று, அவற்றுள் சிலவற்றைத் தின்று, சில வாயிரமாண்டுகள் வாழ்ந்தனர். பின்னர் படிகம் போன்ற கல்லை (Quartzite) உடைத்துக் கருவிகள் பல இயற்றிக்கொண்டனர். அவைகளுக்குப் பழங்கற்கருவிகள் என்று பெயர். அவை சொரசொரப்பானவை. அவற்றால் விலங்குகளின் தோல்வேறு, இறைச்சிவேறாகப் பிரித்து, இறைச்சியை

நறுக்கித்தின்றனர். பன்றி முதலிய விலங்குகளைப் பிடிப்பதற்குக் கற்களைப் பொறியாக (இயந்திரமாக) உபயோகித்தனர். அப்பொறிக்கு அடார்என்றும் * கல்லடார்என்றும்பெயர். ¶ அடார் கருங்கற் பலகையை ஒருபால் சாய்வாக நிமிர்த்திக் கீழேமுட்டுக் கொடுத்து உள்ளால் உணவுவைப்ப அவ்வுணவை விலங்குசென்று தொடுதலுங் கல்வீழ்ந்து கொல்லும்பொறி" இவ்வாறாகத் தமிழ் மக்கள் கற்களால் கருவிகள் இயற்றி இற்றைக்கு 20000-ம் வருடங்களுக்கு முன் சில இலக்க ஆண்டுகளைப் பழங்கற் கருவிக் காலத்தில் செல்ல விடுத்து வாழ்ந்தனர். பழங்கற் கருவிக் காலத்தில் வட இந்தியாவில் மக்கள் வாழவேஇல்லை. அதற்கு அவ்விடத்தில் பழங்கற் கருவிக் காலத்திய கருவிகள் இல்லாதிருத்தலே சான்றாகும். ஆனால் இவ்விடத்தில் ஆரியர்கள் பழங்கற் கருவிக் காலத்தில் எவ்விடத்தில் இருந்தனர் என்ற கேள்வி எழுகின்றது. அவர்கள் புறநாட்டிலேயே இருந்தனர். பழங்கற் கருவிக் காலத்திற்குப் பின்னரேயே ஆரியர்கள் வட இந்தியாவில் வந்து புகுந்ததாகக் கருதப்படுகிறதால் அவர்களைப்பற்றிப் புதுக் கற்கருவிக் காலத்தில் கூறியுளேன்.

---

* "இரும்புலி வேட்டுவன் பொறியறிந்து மாட்டிய
பெருங்கல் லடார்" புறம். 19.

¶ நற். மூலமும் உரையும். பக்கம் 16.

" இனையுண் கேழ லிரியப் புனவன்
சிறு பொறிமாட்டிய பெருங்கல்லடா
ரொண் கேழ் வயப்புலி படூஉ நாடன்" நற் 119.

"புழைதொறு மாட்டிய விருங்க லரும்பொறி" மலைபடு. 194.

"கொல்புலி படுக்கும் பெருங்க னீளடார் வெங்குறவர்
வீழ்த்திடுதலும்,' கூர்ம: சம்புத்தீவின். 28,

" பண்ணேறு சிறுகுதலைக் கொடிச்சியருட் பதைபதைத்து
நடுங்க வெய்ய
திண்ணேறுங் கொடுஞ்சினத்த செங்கணிவா லுனைமடங்கற்
சிதர்ந்து வீழ
விண்ணேறுமரருளம் வியப்பூரக் கல்லதரின் வீழ்த்தி விண்டு
தண்ணேறு மலர்த் தொடையற் குறவருறை வாமனமார்
தகைசால் குன்றம்."

இலிங்க. பிலக்க முதலான தீவு. 54.

தொழில். மக்கள் முதன்முதல் இயற்றிய தொழில் தங்களுக்குரிய உணவுப் பொருள்களைக்கொள்ள, காய் கனி கிழங்குவிலங்கு இவற்றைக் கைப்பற்றத்தொடங்கியதே. மிருகங்களைக் கைக்கொள்ள இயற்றிய தொழிற்கு 'வேட்டு' என்று பெயர். * "வேட்டு=ஒரு தொழில்" அதை இயற்றியவர் வேட்டுவர் எனப்பட்டார். † வேட்டுவர் என்பார் வேட்டுத்தொழில் செய்வார்." மக்கள் முதன்முதல் இயற்றிய தொழில், அதை இயற்றிய காலத்தில் மனிதர் மனைவி மக்களோடு அங்குமிங்கும் அலைந்தே திரிந்தனர். அதனாலேயே மக்கள் ஆதியில் அலைந்து திரியும் நிலையில் இருந்தனர் எனக் கூறுகின்றனர். அந்நிலை அலைந்து திரியுய்நிலை (Nomad stage) அல்லது வேடர் நிலை (Hunting stage) என்று சரித்திர வாசிரியர் பெயரிட்டனர். அந்நிலையில் மக்கள் பழங்கள், விலங்குகள் முதலியன கிடைக்கிற விடங்களில் சிறிது பொழுது தங்கியிருந்தும், உணவுப்பொருள் குறைந்தால் அவ்விடத்தைவிட்டு நீங்கி அவை கிடைக்குமிடத்தை நாடியும் சென்றனர். அதனால் அவர்களுக்கு இடம் விட்டுப்பெயரும் வழக்கம் உண்டாயிற்று. இவ்வாறாகத் தமிழ் மக்கள் வேட்டின் காரணமாக இடம்விட்டுப் பெயர்ந்து செல்லவே பல இடங்களுக்கும் பரவலாயினர். வேடர் நிலையில் இருந்த காலத்திலேயே தமிழ்மக்கள் ஆசியா, ஆபிரிக்கா அமெரிக்கா, ஆத்திரேலியா முதலிய கண்டங்களுக்கெல்லாம் நடந்து சென்றனர். அதற்கு விந்திய பருவதத்திற்குத் தெற்கில் அகப்படும் பழங்கற் கருவிகளைப்போலவே உலகத்தில் பலவிடங்களிலும் ஒரே விதமான பழங்கற் கருவிகள் அகப்படுகின்றன என்பது சான்றாகும். அவ்வாறு பரவினவர் பெரும்பாலும் வேட்டைத் தொழிலை மேற்கொண்டவரே. அவர்கள் குறிஞ்சி நில மக்கள் (மலைப் பிரதேசவாசிகள்) என்று கூறப்பெறுவர். குறிஞ்சிநில மக்கள் தோன்றிய நிலம் மலைப்பிரதேசமாதலால் அவர்கள் நிலவியற்கையால் உடல் வன்மையும் வேட்டைத் தொழிலை மேற்கொண்டு விலங்குகளை வேட்டையாடி வந்ததால்

---

* † தொல். பொருள். இளம். பட்ம். 26.

சிறிது சிறியதாய் உளஉரமும் அடைந்தனர். பிறந்த விடத்தால் உடல் உரமும், தொழிலால் உளஉரமும் அவர்களுக்குப் படிப் படியாய் வளரவே, அவர்கள் மரபினர் பிற்காலத்தில் மற்றைய நிலமக்களை அடக்கியாளும் திறல் வாய்ந்து விளங்கினர். அவர்கள் ¶ "கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு முற்றோன்றி மூத்தகுடி" எனக்கூறப்பட்டனர்.

அவர்கள் வழியில் தோன்றியவரே பின்னர் பெருநில வேந்தரென்றும், முடியுடை வேந்தரென்றும், சேர, பாண்டிய, சோழரென்றும் கூறப்பட்ட மூவேந்தருள் சேரவரசர் என்னும் பெயருடன் விளங்கியவர். வேட்டுத் தொழிலை மேற்கொண்டார் தங்கள் தொழிற்குத் துணையாகக் கொண்டது வில் எனப் பெயரிய கருவி. அவ்வில்லை சேரவரசர், தங்களுக்குரிய * கொடியில் எழுதியிருத்தல் அவர் வேட்டைத் தொழிலை இயற்றி வந்தோர் மரபில் வந்தவர் என்பதை விளக்கும். † வில்லவன் என்னும் பெயரும் அதை ஒருவாறு போற்றும். இவற்றால் பழங்கற் கருவிக் காலத்திய தமிழ் மக்கள் மரபில் வந்தவரே சேரவரசரென வறிக. குறிஞ்சியிற் சில வரசருக்குச் சிலம்பன் மலையன் முதலிய பெயர்கள் உள. அவை ‡ சேர வரசருக்கும் வழங்குகின்றன. அது சேரர் முதலிற் குறிஞ்சிநிலத்தலைவர்களாய் விளங்கியவர் மரபில் வந்தவர் எனக் குறிக்கின்றது. சேரபாண்டிய சோழர் மூவரது தானைக்கும் அடையாளப்

¶ பு. வெண். 2 : 14.

* "அமைவர லருவி யிமையம் விற்பொறித்த
இமைய வரம்ப னெடுஞ் சேரலாதன்" (பதிற்-2-ம் பதிகம்)
இமயஞ் சூட்டிய வேம விற்பொறி
மாண்வினை நெடுந்தேர் வானவன்" புறநா. 39.
"வில்லெழுதிய விமயத்தொடு
கொல்லியாண்ட குடவர் கோவே" சிலப். 2-ம் பதிப்பு பக்கம் [520.

† சேந்தன் திவாகரம் மக்கட்பெயர்த் தொகுதி.

‡ "சிலம்பன் மலையமான் கோச்சேரன் பெயரே" (ஷ)

பூக்கள் முறையே * போந்தை (பனை) † வேம்பு, ‡ ஆர் (ஆத்தி) என்பன. அவற்றுள் சேரரது தானைப்பூ § முதற்கண் கூறப்பட்டுளது. அது சேரரது மூதாதைகளாகிய குறிஞ்சி நில மக்கள் மற்றைய முல்லை முதலிய நான்கு நில மக்களைவிட ஒருபடி பண்டு உயர்ந்து விளங்கினர் என்பதை விளக்கியது.

நெருப்பு

மக்கள் அங்குமிங்கும் அலைந்து திரியும் நிலையில் குறிஞ்சி நில (மலைப்பிரதேச) த்தில் மூங்கில்கள் ஒன்றோடொன்று காற்றால் உரசுவதால் அவை தீப்பற்றி எரிவதைக் கண்டு, மரத்தில் தீயுண்டென்று தெரிந்து கட்டைகளை ஒன்றோடொன்று தேய்த்துத் தீயுண்டாக்கக் கற்றனர்; ஒருகட்டையிற் குழியிட்டு அதைக்கீழேவைத்து அக்குழியில் மற்றொருகோலை வைத்துக் கடைந்து நெருப்புண்டாக்கினர். தீயுண்டுபண்ணுங் கருவியாகிய கோலுக்கு * ஞெலிகோல், † மரக்கடைதீக்கோல், ‡ தீக்கடைகோல், $ அரணி என்னும் பெயர்கள் தமிழ் இலக்கியங்களிற் காணப்படுகின்றன.

---

* "குடையலர் காந்தட்டன் கொல்லிச் சினைவாய்த்
தொடையவிழ் தண்குவளை சூடான்-புடைதிகழுந்
தேரதிரப் பொங்குந் திருந்துவேல் வானவன்
போரெதிரிற் போந்தையாம் பூ"

† "தொடை யணிதோ ளாடவர் தும்பை புனையக்
கொடியணிதேர் கூட்டணந்தம் போழ்தின்-முடியணியுங்
காத்தல்சால் செங்கோற் கமோ னெடுவழுதி
யேத்தல்சால் வேம்பி னிணர்.

‡ "கொல்களி றூர்வார் கொலைமலி வாண்மறவர்
வெல்கழல் வீக்குவர் வேலிளையர்-மல்குங்
கலங்க லொலிபுனற் காவிரி நாட
னலங்க லமராழுவத் தார்."

§ "போந்தை வேம்பே யாரென வருஉ
மாபெருந் தானையர் மலைந்தபூ"

தொல். பொருள். புறத்திணை இயல். சூ. 5.

* "இல்லறைச் செரீஇய ஞெலிகோல் போல" புறநா-315

† "ஆங்கதன் கரையின் பாங்கோ ரணிநிழற் கேழ லிட்டு-வாங்குவிற் காடன்றனனை மரக்கடை தீக்கோல் பண்ணி-ஈங்குநீ நெருப்புக் காண்பா யிம்மலை யேறிக் கண்டு-நாங்கள்வந் தணைவோ மென்று நாணனும் தாமும் போந்தார்" பெரிய: கண்ணப்ப நாயனூர் 99.

‡ "படர்வனத்தில் ஒருசுழல்இட் டருகுதீக் கடைகோல்" ஷை 144

$ "இந்தனத்தை முறித்தெச்சி யெரி கடையும் அரணியினில். வெந்தழலைப் பிறப்பித்த" ஷை 145.

தீக்கு * ஞெலிதீ என்று பெயர்.(ஞெலிதீ=கடைந்து கொள்ளப்பட்ட தீ; ஞெலிதல்=கடைதல்) தீயுண்டாக்கக் கற்றுக்கொள்ளவே மக்கள் படிப்படியாய் உயர்நிலை அடையத் தொடங்கினர். அவர்கள் முன்னேற்ற மடைவதற்கு ஏற்பட்ட முதற்படி இதுவே. மக்கள் கற்களால் கருவிகள் இயற்ற ஒருகல்லால் மற்றொருகல்லையுடைத்தபோழுது, அவற்றினின்றும் தீப்பொறி பறப்பதைப் பார்த்துக் கற்களில் நெருப்புண்டென்று அறிந்து, தீமிகுதியாக வுடைய கல்லைத் துருவியெடுத்து அதில் பஞ்சை வைத்துக் கொட்டித் தீயுண்டாக்கினர் அவர்கள் நெருப்புண்டாக்கப் பயன்படுத்திய கற்களுக்குச் சிக்கிமுக்கிக் கற்கள்என்று பெயர். இவ்வாறாகத் தமிழ்மக்கள் தீயுண்டாக்கி உணவுப்பொருள்களைச் சுட்டும் வதக்கியும் தின்று பலவாயிரம் ஆண்டுகளைப் பழங்கற்கருவிக்காலத்தார் கழித்தனர்.

* "இழுதி னன்ன வானிணக் கொழுங்குறை
கானதர் மயங்கிய விளையர் வல்லே
தாம்வந் தெய்தா வளவை யொய்யெனத்
தான்ஞெலி தீயின் விரைவனன் சுட்டுநின்
னிரும்பே ரொக்கலொடு தின்மெனத் தருதலின்"
புறநா. 150.

"யானை தந்த முளிமர விறகிற்
கானவர் பொத்திய ஞெலிதீ" ௸ 247.

"புல்லென் மாலைச் சிறுதீ ஞெலியுங்
கல்லா விடையன்" ௸ 331.

"இடையன்......ஞெலிகோற் கொண்ட
பெருவிறன் ஞெகிழிச் செந்தீ" பெரும்பாண். 325—6.

(தொடரும்)

சிதம்பர முத்தரையர்.

உ

சிறுமறை.

(குட்டிக்குறள்)

தெய்வப்புலமைத் திருவள்ளுவர்தம் மாண்பும் அவரருளிய தெய்விகத் தமிழ்மறையாந் திருக்குறளின் தன்மையும் கற்று வல்ல பேரறிஞர்களே யறிவர். ஆயினும், இத்தமிழ்நாட்டு மூதறிவாளர்க் கன்றித் தமிழ்மறை 'இத்தமிழ் நாட்டுப்' பலருக்கும் பெரிதும் தெரியாதிருப்பதையும், தெரிந்தும் சரிவர அஃது அவர்கட்குப்பயன்றரு நிலைமையிலில்லாது மிக்குயர்ந்திருப்பதையும், அதனால் தமிழ்பயில் மாணவ மாணவிகட்குத் திருக்குறள் (தமிழ்மறை) பாடமாதற் கியலாக் குறைவையுங்கண்டு வருந்தியேற்குப் புலனாயவழி, அம்முதனூலொடு முரண்படாவாறு இக்குட்டிக்குறளினை இயைப்பான் துணிந்தேன். பெரிதும் அக்குறளையே தழுவிக்கருத்து மாறுபடாது தமிழக மாந்தரனைவர்க்கும் பயனாமாறு, சற்று நடைமுறையும் பயிறற் கேதுவாக இதனை ஆக்கியுள்ளேன்

அறிஞர்கள் இவ்வெனது முயற்சியுள் குறைபாடு திருத்தலாவனகாணின் எனக் கறிவுறுத்தற் பாலர். அங்ஙனமாக வரும் ஊக்கவுரைகளைச் சிரம் பணிந் தேற்குமவாவினேன். அன்றிச் சொற்களை, எழுத்துக்களை மாற்றுதற்கு அநுமதி பெறுதலவசியமாகும்.

திருக்குறள் முதுமறையாக, இக் குட்டிக்குறள், சிறுமறையாதல் தகுவதே யென்ற கருத்தினேன். "திருக்குறள்" என்னும் பெயர் எழுத்துப் பெருக்கத்தினும், அந்நூற்குச் சிறுநூல் இது ஆகலான், இதன் பெயரும் அதினினுஞ் சுருங்கிய அளவில், இங்ஙனம் "சிறுமறை" என்றமைதல் பொருந்து மென்பதும் ஒன்று.

தமிழ் மாணவர்கள் இச்சிறுநூற் பொருள்கொண்டு தமது பிற்காலத்துணர்விற் பெருநூலிற் பெரும்பயன் துய்ப்பார்களென்பது எனது கொள்கை.

[குறிப்பு:—இந்நூல் முதலாவது அறத்துப்பாலளவில் முடிவுற்றிருக்கின்றது. பெரியார் பலரின் அபிப்பிராயந் தெரிந்து ஏனைப் பகுதிகளையு மியைக்குங் கருத்தினே னாதலால், இது குறித்த தங்கள் தங்களினபிப்பிராயங்களை விரைந்து தெரிவித்தருள்க.]

இங்கு மாதிரிக்கென இரண்டொரு அதிகாரங்கள் தரப்படுகின்றன. திருக்குறளின் அவ்வவ் வதிகாரப் பாக்களோடு இவற்றை இணைத்துவைத்து நோக்குக.

அதி-௪௰ : கல்வி.

கசடறக் கற்றுத் தகநிற்ப தழகு.
எண்ணெழுத் தாயிருக் கிருவிழி யென்ப.
கண்கற்ற வர்க்கே புண்மற்ற வர்க்கு.
உவகைச்சேர் வுள்ளப் பிரிவுளார் புலவர்.
இல்லார்போ லேங்கிக் கல்லாரே கடையர்.

உற்றாறு நீர்போற் கற்றோறு மறிவு.
யாதுமூர் நாடெனி லோதுரு ரென்னே!
ஒருமையின் கல்வி யெழுமையு முதவும்.
உலகுறு மின்பம் புலவர்த மின்பம்.
கேடறு செல்வம் மாடுறு கல்வி.

அதி-௪௨ : கேள்வி.

புவிச்செல்வ மெதினுஞ் செவிச்செல்வம் பெரிது.
செவிக்குண வின்றேற் சிறிதுண லாகும்.
அருஞ்செவி யுணர்வா ரமரரி னமர்வார்.
கல்லாருங் கேட்கின் வல்லோரே யாப.
ஏற்றத்தார் வாய்ச்சொ லூற்றுக்கோ லற்று.

எனைத்தானுங் கேட்கி னனைத்தானும் பெருமை.
மேதகை யுணர்வார் பேதைமை யுணரார்.
கேட்டிலாச் செவியேற் றோட்கினுங் கேளா.
நுணங்குகேள் வியிலார் வணங்குவா யிலரே.
௧௦. செவியுணர் வில்லா னவியின்வா ழினுமென்?

சுகவனம் சிவப்பிரகாசன்.

ஸ்ரீ

தமிழ்ப்பொழில் இதழாசிரியர் அவர்கட்கு:—

அன்பார்ந்த ஐயா!

தாங்கள் அன்புடன் வரவிடுத்த தமிழ்ப்பொழிலின் கைப் பகுதி கிடைக்கப்பெற்றேன். அதனுள், "கலிங்கத்துப்பரணி யாராய்ச்சி விளக்கம்" என்ற கட்டுரையெழுதிய பண்டிதர், ஏதோ சிலவற்றைக்கூறி முடிவில்—"...........பத்திரிகைகளின் ஆசிரியர்களேனும், மற்றுமுள்ள செந்தமிழ்ப் புலவராம் பெருந் தகையாளருள் ஒருவரேனும் எங்களிருவர் வாதங்களையும் ஆதி முதல் உற்று நோக்கி எங்களைத் தெளிவிப்பீர்களாக" என்றெ ழுதிய கூற்று விநோதமாகத் தோற்றியது. தம்மைத் தெளி விக்குமாறு விளக்கமுடையார் கேட்கும் அவ்வேண்டுகோள் அவர் சொந்தக் கூற்றேயன்றி என்னுடையதன்று. ஆகவே, "எங்களைத் தெளிவிப்பீர்களாக" என்று அவரெழுதிய............ சொல்லால், நானும் உட்பட்டு வேண்டுவதாக எவருங்கருதா ரென்றே நம்புகின்றேன்.

கலிங்கத்துப்பரணிப்பதிப்பிற் செய்தற்குரியனவாக நான் கண்ட திருத்தங்களைத் தமிழகம்புகழுந் தக்கோர்கள் நன்கா ய்ந்து தங்கள் சீரிய கருத்துக்களை எனக்குத் தாங்களாகவே எழுதியுள்ளார்கள். அத்திருத்தங்கள் பற்றிச் **செந்தமிழிலும் தமிழ்ப்பொழிலிலும்** எழுந்த ஒரு சிலஆசங்கைகளும்தெளிவாக் கப்பட்டமையால், இனியுந் தெளிவடைய வேண்டுவன அதிக மில்லை. அதனல், ஏதோ பெரிய விவாதங்கள் தீரமுடியாத

வற்றைத் தீர்த்துவைக்கக் காரணிகர் மிக அவசியம்போலப் பண்டிதர் எழுதுவதன் நோக்கம் அறிந்திலேன். அங்ஙனம் இடைநின்று முடிவுகூறவல்ல காரணிகரைத் தேடவேண்டிய இன்றியமையாமை எனக்கு இல்லை. எனினும், என் ஆராய்ச்சிகளின் மேல் நியாயவாயிலாக எழுதப்படும் எவ்வகைக் கருத்துக்களையும் விருப்புடன் வரவேற்கவும், அவை முடிவான கூற்றென்னும் நியதியின்மையால், அவற்றுள் ஏற்பவற்றைக்கொண்டு ஏலாதவற்றில் என் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவும் நான் எப்பொழுதும் சித்தனுயுள்ளேன்.

மு. இராகவையங்கார்.

நக்கீரர்.

களம்:-ஒன்பது: சங்கமண்டபம்.

காலம்:-காலை.

நடிகர்:-தருமி, ஆலவாய்ப் பெம்மான் (ஒரு புலவர் வடிவில்) நக்கீரர் ஏனைய சங்கப்புலவர். (ஆலவாய்ப் பெம்மான் தருமியுடன் சங்கம் நோக்கிவருதல்)

ஆலவாய்ப்:-(சங்கப்புலவரை நோக்கி) இக்கூட்டத்தவரில் இச் செய்யுளுக்குக் குற்றம் கூறியவர் யாவர்?

நக்கீரர்:-(முன் வந்து) யாமே கூறினேம்.

ஆலவாய்ப்:-குற்றம் யாது சொல்?

நக்கீரர்:-கூந்தலுக்கு மலரின் சார்பாலன்றி மணமின்மையின் இச்செய்யுள் பொருட் குற்றமுடைத்து.

ஆலவாய்ப்.-உயர்வகை மாதரின் கூந்தலுக்கேனும் இயற்கை மணமுண்டன்றே?

நக்கீரர்:-இயற்கையில் கூந்தலுக்கு மணமுண்டென்பது இயற்கைக்கு முரணாகும். செயற்கையால் பங்கியும் மணம்பெறுதலும் செயற்கையின்றிக் கூந்தல்மணம் பெறுமையும் யாவரும் உணரக்கூடிய உண்மையாகும். ஆகையின் உயர்வகை மாதரின் கூந்தலுக்கு மணமுண்டென்பது பொருந்தாக் கூற்றாகும்.

ஆலவாய்ப்:-தேவ மாதருடைய கூந்தலுக்குள்ள மணம் செயற்கையதோ?

நக்கீரர்:-அஃதுமற்றே. இதில் ஐயமேற்படுவதற் கிடனின்று.

ஆலவாய்ப்:-நீ வழிபடுங் கடவுளாய திருக்காளத்திநாதர் பாகத்தமர்ந்த ஞானப்பூங்கோதையின் கூந்தலும் அத்தன்மைத்தோ?

நக்கீரர்:-அதுவுமற்றே.

ஆலவாய்ப்:-(நெற்றிக்கண்ணினையுஞ் சடைமுடியினையுங் காட்டுதல்)

நக்கீரர்:-நீ வடிவெலாங் கண்ணகக் காட்டினும் நின்செய்யுள் இழுக்குடையதே. மற்று அதன்பாலுள்ள குற்றம் குற்றமேயாம். தண்டமிழ்வல்ல என்னைக் கண்ணையுஞ் சடையினையுங்கொண்டு வெருட்டல் வேண்டா. இதற்கு யான் அஞ்சுகிலேன்.

ஆலவாய்ப்:-எம்மொடு மாறுபட்டு இமையப்பூங்கொம்பின் கூந்தலையும் பழிந்துரைத்த நீ குட்டநோயுற்றலைக.

நக்கீரர்:-அருட்கடலே! உண்மையினை உள்ளவாறுரைத்தல் என்பாற் குற்றமேயோ? இதற்கென்னைச் சபித்தலுந் தகுதி யுடைத்தாமோ?

ஆலவாய்ப்:-உண்மையைக் கரவாதுரைத்தமைக்குச் சபிப்பது தகுதியன்றாயினும், இமையப்பூங்கொம்பின் கூந்தலையும் பழித்தது நின்பாற் குற்றமேயன்றோ?

நக்கீரர்:-ஐயனே! அருந்தமிழரசே! தமிழ்த்தாயின்மீதுள்ள பேரன்பினால் நாயினேன் அறிவுமயங்கி ஞானப் பூங்கோதையின் கூந்தலையும் பழித்தது அடாத செயலேயாகும். இப்பிழையினைப் பொறுத்தருளிச் சாபப்பிணியைத் தவிர்த்து ஆட்கொள்ளல் வேண்டும்.

ஆலவாய்ப்:-நீ சென்று கயிலைகாணில் இக்கொடுநோய் தீரும். (தருமியை நோக்கி) தருமி, நீ சென்று பொற்கிழி எடுத்துச்செல்க. (தருமி செல்லுதல்)

நக்கீரர்:-அடிகேள்! சின்னாட்பல்பிணிச் சிற்றறிவினனாகிய யான் கயிலைகாண்டல் எளியதொன்றோ? அன்றியும் இக் குட்டநோயுடன் எவ்வாறு கயிலை செல்வேன்? அருள்கூர்ந்து கொடுநோயினைத் தவிர்த்தாட்கொள் ளல் வேண்டும்.

ஆலவாய்ப்:-நீ வழிபடுங் காளத்தி, கயிலைக் கொப்பாக வுள்ளது. அதனைச் சென்று வணங்குவையாயின் இக்கொடு நோய்தீரும். (ஆலவாய்ப்பெம்மான் மறைதல்.)

நக்கீரர்:-இனி யிதனை இறைவன் கட்டளைப்படியே காளத்தி கண்டொழிப்பேன். (புலவர்களை நோக்கி) புலவர் களே! நுங்களோடு உடனுறையும் வாழ்வினை நீங்கிய ஒருபெரும்பாவியேனை மறவாதீர். ஐயகோ! உங்களை எவ்வாறு விட்டுப்பிரிவேன்! நுங்களைத் தழுவிப் பிரிவதற்கும் எனது குட்டநோய் தடுக் கின்றதே! என்செய்வேன்! என்னுடைய அறி யாமையினை என்னென்றுரைப்பேன்! இறுமாப் புடன் எதிர்த்தவென்னைச் சுட்டெரிக்காத இறைய னுருடைய பேரருளை என்னென்றுரைப்பேன்!

(புலவர்கள் நக்கீரனுரை ஒவ்வொருவராகத்தழுவிக் கண்ணீர்விடுகின்றனர்.) புலவர்களே, அழுதழுதும்

என் செயவல்லேம்? அழுகையொழிமின்! யான் சென்று வருகின்றேன். கல்லாட! யான் சென்று வருகின்றேன். காடே! யான்சென்று வருகின்றேன். புலவர்களே! யான் சென்று வருகின்றேன்

(செல்லுதல்)

கல்லாடார்:-புலவர்களே, நாம் இறைவனிடம் சென்று முறையிடுவோம். நக்கீரனைப் பிரிந்து யாம் ஒருநாழிகையுந் தரியேம். நமது சங்கத்தின்நிலை என்னாகும்!

(எல்லோரும் செல்லுதல்.)

களம்:-பத்து: ஆலவாய்ப்பெம்மான் திருக்கோயில்.

காலம்:-பகல்.

நடிகர்:-கல்லாடர் முதலிய புலவர்கள்.

(புலவர்கள் எல்லோரும் கோயில்முன் கைகூப்பி நிற்றல்)

கல்லா:—திருத்த னேசர ணஞ்சர ணம்மறைச் சென்னிமேல்
நிருத்த னேசர ணஞ்சர ணம்நிறை வேதநூல்
அருத்த னேசர ணஞ்சர ணந்திரு வாலவாய்
ஒருத்த னேசர ணஞ்சர ணங்களு னக்குநாம்.

பாயு மால்விடை மேல்வரு வோய்ப்பல் லுயிர்க்கெலாந்
தாயுந் தந்தையு மாகுநின் றண்ணளி தாமரைச்
சேயு மாதவன் போனல்ல தீயவி யற்றினூர்க்
காயு மின்பமுந் துன்பமு மாக்குவா தலால்.

துய்ய கீரன்முற் சூழ்வினை யாலறி யாமை
மையல் கொண்டுநின் முன்சில வார்த்தைக
ணவின்றான்.
ஐய னேஅருள் வாரியே யருந்தமி ழரசே
தையல் பாகனே பொறுத்தருள் தமியரை வேண்டி.

ஐயனே! ஆலவாயமர்ந்த மெய்யனே, பெரும்புலவர் தலைவராகிய நக்கீரனுரை இழந்தனற் சங்கமானது மெய்யுணர்வில்லாக் கல்வி போன்றும், கொற்றவனில்லாக் குடிபோன்றும், தாமரையில்லாத்தடாகம் போன்றும் பொலிவிழந்து வருந்துகின்றது. ஆகையின் அருள்கூர்ந்து அவருடைய குட்ட நோயினைத் தீர்த்தருளி மீட்டல் வேண்டும்.

ஆலவாய்ப்:- அன்பர்களே, நக்கீரன் வையையின் வடகரையைச் சார்ந்துளான். விரைவிற் சென்று அவனைத்திருப்பிக் கொணர்ந்து பொற்றாமரை வாவியில் மூழ்கச் செய்மின்! அதுபோது குட்டநோய் அவனைவிட்டகலும்.

கல்லாடர்:- அடிகேள், அவ்வண்ணமே செய்கின்றேம்.

(எல்லோரும் செல்லுதல்.)

களம்:-பதினேன்று: வையையின் வடகரை.

காலம்:- மாலை.

நடிகர்:- நக்கீரர், இடைக்காடனர்.

நக்கீரர்:— என்றினி மதுரை காண்பேம்! எப்பகல் சவுந்த
ரேசன்
தன்திரு வடிகள் காண்பேம்! தாயையெஞ் ஞான்று
காண்பேம்!
வென்றிவேற் றரும வேந்தர் வேந்தனை யெந்நாட்
காண்பேம்!
ஒன்றுயிர்த் துணையாம் சங்கத் துறவையெப்
பொழுது காண்பேம்!
நுணங்குமா ணறிவின் மிக்க நூல்வலார் மறப்பர்
கொல்லோ!
வணங்குதேர்த் தானை மன்னர் மணிமுடி
யுழுக ழுற்கால்!

அணங்குடை யரிமான் றுப்பின் அரசர்கோன்
நினையான் கொல்லோ !
இணங்குநாற் புலவர் நாற்பான் எழுவர்என்
றுரைக்குங் கொல்லோ !

அந்தோ! என் செய்தேன்! கல்விச்செருக்கு என்னை இவ்வாறு வீழ்த்தியதே? என்னுடன் உயிரோ டுயிராய் அளவளாவிய என்னரிய நண்பர்கள் இனி என்னை என் சொலார்? என் செருக்கினை இகழ் வாரன்றோ? யான் அவர்கள் இகழ்ச்சிக்குரியன் முன். அன்புருவாய எனது தோழன் கல்லாடனை இனி என்று காண்பேன்? உடனுறையுமுயிரனைய இடைக்காடனை யானினி என்று பார்ப்பேன்? புலவராலும் சொலற்கரிய பெருமை கொண்டு திகழும் மதுரை மாநகரினை இனி யென்று காண் பேன்! ஆ! மதுரையே! நின் பெருமை யிருந்த வா றென்னே!

தண்டமிழ் வேலித் தமிழ்நாட் டகமெல்லாம்
நின்று நிலைஇப் புகழ்பூத்த லல்லது
குன்றுத லுண்டோ மதுரைக் கொடித்தேரான்
குன்றமுண் டாகு மளவு.
செய்யுட் கிழைத்த திலகம்போற் சீர்க்கொப்ப.
வையம் விளங்கிப் புகழ்பூத்த லல்லது
பொய்யாத கண்டோ மதுரைப் புனைதேரான்
வையையுண் டாகு மளவு.

ஓ வையையே, வையைக்கரையே, யானினி யென்று உங்களைப் பார்ப்பேன்! ஆ! (மூர்ச்சித்து வீழ்தல்)

இடைக்கா:-(வந்து அவரை நிமிர்த்தி)

புலவரேறே, உம்மைப் பிரிந்து யாம் இவ்வுலகில் வைகுவமோ? எம்பெருமானுடைய திருவடியை யடைந்து குறையிரந்தோம். அவரும் பொற்று

மரைத்தடத்தில் மூழ்கி யெழுந்தால் பிணிநீங்கு மென்றருளிச்செய்தனர். ஆதலின் யான் தம்மை நாடி ஈண்டுவந்தேன். திரும்பியருளல் வேண்டும்.

நக்கீரர்:-பெருமானையன்றி யென் பிழையினைப் பொறுக்கவல்லாரியாவர்? அவர்கட்டளைப்படி கயிலையினையாவது காளத்தியினையாவது காணவே விருப்புக் கொண்டிருந்தேன். இதனைப் பெருமானுரே தடுத்தமையின் இனி 'கயிலைபாதி, காளத்திபாதி' என்னுமந்தாதி யொன்றுபாடி அவருடைய அருளைப் பெறுதற்கு முயற்சிக்கின்றேன்.

(இருவரும் செல்லுதல்)

களம்:-பன்னிரண்டு: அரண்மனையில் ஒரு தனியிடம்.

காலம் :-மாலை.

நடிகர் :-சண்பகமாறன், அமைச்சர்.

(இருவரும் அமர்ந்திருத்தல்.)

அமைச்சர் :-அரசே, யானன்று கூறியவாறே ஆலவாயண்ணல் தங்கள் உள்ளக் கவலையைத் தீர்த்தருளினரன்றே?

சண்பக :-ஆயினும் இறைவனுடைய செய்யுளுக்கு இழுக்குரைத்தானன்றே நமது நக்கீரர்!

மற்றவரோ தமிழ்பாடி நாட்டவல்லார் நக்கீரர் வலிய ராகி
வெற்றிபுனை மீனாட்சி சுந்தரனா பகரடுத்து விளம்பும்போதில்
பற்றுளதண் டலைவாழுங் கடவுளென்றும் பாராமற் பயப்படாமல்
நெற்றிவிழி காட்டுகினுங் குற்றமே குற்றமென நிறுத்தினரே.

அமை :-எவ்வாறாயினுந் தங்கள் எண்ணம் நிறைவேறிவிட்டது. தருமியும் பொற்கிழி பெற்றுச் சென்றுவிட்டான்.

கூந்தலுக்கு இயற்கையில் மணமுண்டென்று தாங்கள் கொண்டதே யுண்மை.

சண் :-நக்கீரர் இதனை ஒப்பவில்லை. அம்மையின் கூந்தலுக்கும் பழிசொன்னமையாலேயே இறைவன் அவரைக் கடிந்தார்.

அமை :-நமது புலவர்களே பொய்படிமையில்லாத புலவர்கள். அவர்களது வேண்டுகோட்கிரங்கிப் பெருமான் நக்கீரரது பிணியினை நீக்கியருளினானன்றோ?

சண் :-ஆம், பிணியினின்று நீங்கியதுமன்றிப் பெருமானுடைய பேரருட்டிறனை வியந்து 'கயிலைபாதி காளத்திபாதி' என்னும் அந்தாதியும் பாடிவிட்டார்.

அமை :-ஆகவே பெருமானுடைய திருவருள் நமக்கு உள்ளவரையிலும், நமக்கும் நமது புலவர் பெருமக்களுக்கும் யாதொரு தீங்குமில்லையாகும். என்றென்றும் அவருடைய அருளையே பெற்றுய்வோமாக.

சண் :-அவனருளின்றி ஆவது ஒன்றுண்டோ? அவனருளைப் பெறின் எல்லாம் இனிது முடியும். (செல்லுதல்)

முற்றும்

மழைவளஞ் சிறக்க நாளும் மாநிலத் துயிர்க ளெல்லாம்
தழைவுறு முளத்த வாக தருமமே தலைநின் றோங்க
பழையநம் தமிழின் சீர்த்தி பரவுக வுலக மெல்லாம்
விழைவுற வரசன் செங்கோல் மேன்மையின் விளங்க மாதோ.

உ

ஒரு குறட்பா.

“நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது”

இது தெய்வப்புலமைத் திருவள்ளுவதேவர் அருளிய திருக்குறளிற் புகழ் என்னும் அதிகாரத்திலுள்ளது. இதற்குப் பரிமேலழகர் கூறிய பொழிப்புரை “புகழுடம்பிற்கு ஆக்கமாகும் கேடும், புகழுடம்பு உளதாகும் சாக்காடும் சதுரப்பாடுடையார்க் கல்லது இல்லை” என்பது.

வறுமையால் உடம்பை மெலியச்செய்து புகழை வளர்த்தலும், உடம்பைத் துறந்து புகழை நிலைபெறச் செய்தலும் வித்தகர்க்கே கூடுமென்பது பரிமேலழகர் கருத்து; இஃது அவராலேயே நன்கு விளக்கப்பெற்றுளது. “நந்து என்னுந் தொழிற்பெயர் விகாரத்தால் நத்து என்றாய், பின் அம் என்னும் பகுதிப்பொருள் விகுதிபெற்று நத்தம் என்றாயிற்று. போல் என்பது ஈண்டு உரையசை என நத்தம், போல் என்னும் இருசொற்களுக்கும் அவர் இலக்கணங் கூறியுள்ளார்.

காலத்தாற் பரிமேலழகர்க்கு முந்தியவரென்று கருதப்படுகிற மணக்குடவர், இப்பாட்டிற்கு “ஆக்கம் போலக் கேடும் உளதானாற்போலச் சாதலும் வல்லவற் கல்லது அரிது” எனஉரை கூறி “இது புகழ்படவாழ்தல் மக்களெல்லார்க்கும் அரிதென்றது” எனக் கருத்துரைத்துள்ளார். மணக்குடவர் தம் கருத்தை நன்கு விளக்கிற்றிலராயினும், இருவர்கருத்தும் முரண்படாமை காணற்பாலது. நத்தம் என்பதற்கு ஆக்கமென்றே இருவரும் பொருள் கூறினர். பரிமேலழகர் போல் என்பதனை உரையசையெனக் கொண்டு ஆகும் என்பதனை முன்னுங் கூட்டினமையும், மணக்குடவர்போல் என்பதனை உவமச்சொல்லாகவேநிறுத்தி அதனைப் பின்னும் கூட்டினமையும் தம்முள் வேறுபாடாம். வித்தகன் வித்தகர் என ஒருமையும் பன்மையுமாகப் பாடங்கொண்டமையும் ஆம்.

இனி, பெயரறியப்படாத ஒருவரதுரையுடன் கூடிய திருக்குறட் பனையேட்டுச் சுவடியொன்று என்னிடமுளது. அவ்வுரை பரிமேலழகர் முதலாயினரின் உரையுடன் சேர்த்தெண்ணற் கேற்ற தகுதியுடையதாகத் தோன்றாவிடினும், சில காரணங்களால் அன்னோர் உரைக்கும் முற்பட்டதாமோஎன ஐயுறத்தக்கதாகவுளது. சிற்சில பாக்கட்குப் பிண்டமாகக் கருத்து மாத்திரமே கூறப்பட்டுளது. வேறுபட்ட பாடங்களும் காணப்படுகின்றன. அதன்கண் இப்பாவிற்கு எழுதப்பட்டிருக்கும் உரை:-

"சங்காயிரஞ் சூழவாழும் வலம்புரிபோலே கிளையானது தன்னைச் சூழவாழ்வது கீர்த்திமானுக்குக் கைவரும்-என்றவாறு" என்றதே. இதிலிருந்து இப்பாவிலுள்ள 'கேடு உளதாகுஞ் சாக்காடும்' என்னுஞ் சொற்கட்குப் பொருளறியக் கூடவில்லை; எனினும், 'நத்தம்' என்பதற்கு 'வலம்புரி' எனப் பொருள் கொள்ளப்பட்டிருப்பது வெளியாகிறது.

இனி, சீவகசிந்தாமணியில் "சங்குடைந்தனைய வெண்டாமரைமலர்த் தடங்கள்போலும்-நங்குடி" என்பதற்கு "தடங்களிலே உடைந்த தன்மையவாகிய மலரும் சங்கும்போலு நங்குடி. இது தூய்மைக்குவமை; இனிச் சங்கு கெட்டாலும் நிறங்கெடாததுபோலக் கெட்டாலுந் தன்றன்மை கெடாத குடியுமாம்; 'நத்தம்போற் கேடும்' என்ப" என நச்சினார்க்கினியர் உரை கூறியுள்ளார். பிற்பொருளில் சங்கு உடைந்தனையகுடி என இயையும். சங்கு கெட்டாலும் நிறங் கெடாததுபோலக் கெட்டாலுந்தன்றன்மை கெடாதகுடி என்று கூறியவர் அதற்கு மேற்கோளாக 'நத்தம்போற் கேடும்' என்பதனைக் காட்டியிருப்பதிலிருந்து, அவர் நத்தம் என்பதற்குச் சங்கென்று பொருள் கொண்டுள்ளமை புலனும். 'உளதாகுஞ்சாக்காடும்' என்பதற்கு நச்சினார்க்கினியர் கொண்ட பொருள் இன்னதென வெளிப்படாவிடினும், 'நத்தம்போற்கேடும்' என்பதற்கு அவர்கொண்ட பொருள் 'புகழ்குன்றுதலில்லாத வறுமை' என்பதாகல் வேண்டும். "புகழ் குடியின்றன்மை, அன்றி வித்தகர் தன்மை ஆகும். எனவே இக்குறளுக்கு மணக்குடவரும்பரிமேலழகரும் கொண்ட

கருத்துடன் நச்சினர்க்கினியர் கருத்துமாறுபட்டிலதுஎன்பதும், எனினும் நச்சினர்க்கினியர் நத்தம் என்பதற்குச் சங்கென்று பொருள்கொண்டு அதனை உவமையாக்கியுள்ளாரென்பதும்போதருதல் காண்க.

யான் சிறியனுய்த் திண்ணைப்பள்ளியில் திருக்குறள் படித்து வந்தபொழுது என் தந்தையார் முதலாயினர் 'நத்தம்' என்பதற்கு நத்தை யென்றும், சங்கென்றும் ஏதேதோபொருள்கூறக் கேட்டுளேன். ஆனல் அப்பொழுது அவர்கள் பொருத்தமுறப் பொருள் சொல்லியதாக நான் நினைக்கவில்லை. அஃதெவ்வாறயினும் நத்தம் என்பதற்குச் சங்கென்னும் பொருள் உச்சிமேற் புலவர்கொள். நச்சினர்க்கினியராலும் கொள்ளப்பட்டுளதென இப்பொழுதறியலானேன்.

பண்டிதர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்.

உ

வள்ளுவர் கலித்துறை.

கடவுள் வாழ்த்து.

உலகுக் கொருமுத லுண்டவ னெள்ளிய மாணடிசேர்ந்
திலகுற் றிடுமெய்ப் புகழ்புரிந் தோரீண் டிருவினையின்
பலகுற்ற வின்னற் பவக்கட னீந்துவ ரென்றுரைத்தான்
அலகற்ற சீர்த்திரு வள்ளுவ தேவ னனைவர்க்குமே.

வான்சிறப்பு.

ஊனமி லர்துயிர் யாவையும் வாழ்வது முண்பதுவும்
தான முடன்றவந் தான்றழைத் தோங்கலுந் தாரணியில்
வானவர்பூசை நடத்தலும் வான்பெய லாலெனநற்
றேனமர் சொல்லிற் றெரித்தவன் சீர்த்திரு வள்ளுவனே.

நீத்தார் பெருமை.

அஞ்சவித் தான்ற செயல்புரி வார்பற் றறுத்தொளிர்வார்
எஞ்சலி னற்குணத் தாரந்த ணாளரிவர்பெருமை
விஞ்சிய தாகுமுலகினி லென்று விளம்பியநம்
தஞ்சுடை யான்றிரு வள்ளுவன் சீரடி சார்குதுமே.

அறன்வலியுறுத்தல்.

அறமது மும்மையு நல்குவ தாலே யணைத்துயிர்க்கும்
உறுதுணை யாமஃ தொல்லும் வகையா னெறிவின்றியுள்
மறுவிலனை வுஞற்றுக வென்றருள் வள்ளுவன்சீர்
நறுமலர்ச் சேவடி யென்னுளஞ் சென்னியி னற்குறவே.

இல்வாழ்க்கை.

இல்லார் பொருளொன் றியல்புறு மூவர் பிதிர்முதல்
எல்லா வழியும் பகுத்துனு மன்புடை யில்லறமே
நல்லா றெனப்புகல் வள்ளுவ தேவ னறியதமிழ்ச்
சொல்லா றுணரும் பொறியுடை யார்மகிழ் தோய்குவரே.

வாழ்க்கைத்துணை நலம்.

தன்னிறை காத்துக் கணவனைப் பேணுந் தகையுறு சொற்
பொன்னினல் லாண்மழை பெய்யெனப் பெய்யும் பொலியு மவ்வில்
என்னில தூங்குப் பெருந்தக்க வென்னுள வென்றுரைத்தான்
மன்னிய வாய்மையன் மன்புல வன்றிரு வள்ளுவனே.

புதல்வரைப் பெறுதல்.

குழலினும் யாழினு மின்பம் பயக்குங் குதலைச்செவ்வாய்
அழகிய மக்கட் பெறலிற் பெறும்பே றிதவரைக்
கழகமுந் தேறப் புரிவது தந்தை கடனெனவே
தழல்புரை தூய்மைத் திருவள் ளுவனுரை தந்தனனே.

அன்புடைமை.

அன்போ டியைதற் கமைந்த தொடர்ச்சியிஃ தாகலினல்
அன்புசெய் வாருடம் பேயுயிர் நின்றதா மவ்வுடம்பும்
அன்புடை யார்பிறர்க் காக்குவ ரன்பே யருந்துணையென்
றன்புரு வாக்திரு வள்ளுவன் கூறியளித்தனனே.

விருந்தோம்பல்.

மேவாவில் வாழ்குவ தெல்லாம் விருந்தோம்
புதற்பொருட்டால்
சாவா மருந்தெனி னுந்தமித் துண்டல் தவிர்கமனை
மர்வாழ் குவள்விருந் துண்டமிச் சின்மிசை வான்புலங்கள்
தாவா விளைவுறு மென்றனன் றண்ணளி வள்ளுவனே.

இனியவை கூறல்.

ஈர மளைந்து படிறில வாகிய வின்மொழியாற்
சீரிய நற்பொருள் செப்புவ ரல்லவை தேபவறம்
பாரினி லோங்குவ ரின்னாத கூறல் பழியுறுநஞ்
சாருவ தாமென் றறைந்தனன் வள்ளுவ வந்தணனே.

(தொடரும்)

பண்டித மு. வேங்கடசாமி நாட்டார்.

ஒரு விண்ணப்பம்.

சீருஞ்சிறப்புமெய்திய நந்தண்ணிய தமிழ்நாட்டின்கண் வானம் பொய்யாது மண்வளம் பிழைபாது, ஊனுடை உயிர்கள் உறுபசி யறியாது ஒரு தனிக்கோலோச்சிய வரவோர் வழித்தோன்றிய தலைவர்களே! சிறியேன் விண்ணப்பத்திற்குச் செவிசாய்க்குமாறு தங்களைப் பன்முறை வேண்டுகின்றேன். ஐயன்மீர்! நுங்கள் முன்னவராகிய சேர சோழ பாண்டியமன்னர்கள் அறநெறி பிழையாது ஆழி யுருட்டித் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் இன்பச்செவ்வி மன்பதை யெய்த் அரசு செலுத்தி வந்தனரென்பது அவர்கள் வழித்தோன்றல்களாகிய தாங்களும் நன்கறிந்ததொன்றேயாம். இஃது இங்ஙனமாக நுங்களிலொருசாரார் தக்கவின்ன தகாதன வின்னவென் றெக்க வுன்னலராகிப் பிறஉயிர்களைக் காரணமின்றித் துன்புறுத்தலே தாங்கள் இம்மையிலெய்தும் உறுதிப்பயனெனக் கருதிப் பயனின் முயற்சியி லிறங்கித் தங்கள் தவப்பொழுதினை அவப்பொழுதாக்கிப் பழியையும் பாவத்தையும் ஈட்டுகின்றனர்.

இவர்கள், முன்னையோர் விடுநிலமருங்கிற் படுபுல்லார்ந்து கான்யாற்றொடுங் கலங்கலில்நீரினை யருந்திப் பிறந்த நாட்டொடங்கிச் சிறந்த தம்தீம்பாலினை அறந்தரு நெஞ்சினோ டருள்சுரந் தூட்டிக் கனவிலும் மறந்தேயாயினும் அறந்திறம்பும் வினை சிறிதுமியற்றாத யாட்டின் குட்டிகளை இளம் பருவத்திலேயே ஒற்றைக்கிரட்டையாக விலைகொடுத்துத் தாயினின்றும் பிரித்து விடுகின்றனர். பின்னர் அவைகளைக் கழுத்திற் கயிறுகளைப் பூட்டித் தூண்களில் யாத்துத் துன்புறுத்துவதோடு பாதுகாத்தற்பொருட்டு மாதமொன்றுக்குப் பதினைந்து வெண்பொற்காசுகள் வேதனமாக வளித்துக் கல்லாமுழுமக்கள் பலரை நியமிக்கின்றனர். இம்முழுமக்கள் இவ்வியாட்டின் குட்டிகளைப் புல்லுந் தழையும் கொள்ளும் விதையும் விலாப்புடைக்க வுண்ணச்செய்து நீராட்டி அவைகளின் கோடுகளைச் சீவி எண்ணெயிட்டு அக்

கோடுகளிற் சதங்கை முதலிய அணிகலங்களை யணிந்து களிக்கின்றனர். இவ்வரையர்கள் போர்க்களமொன்றை நியமித்து நாட்குறித்துத் தங்கள் தங்கள் கடாக்களை அளவிறந்த வானந்தத்தோடு கொணர்ந்து அக்களத்தில் நிறுவச்செய்கின்றனர். அக்காலத்தவர்மாட்டு உண்டாமகிழ்ச்சி அளவிடுந்தரத்ததன்று. பின்னர் அவ்விரு கடாக்களும் ஒன்றினோடொன்று தீயெழத் தாக்குதலால் ஒன்று செந்நீரோடத் தலைதகர்ந்து தரையிற்சாய்ந்து உயிர் துறக்கின்றது.

இதனைக்கண்டு களிக்கவரும் அறிவிலிகள் கைகொட்டி நகையாடலைக் காணுந்தோறுங் காணுந்தோறும் மனங்கரைந்து உருகாமாந்தர் ஒருவருமிலர். அம்மம்ம! இப்பாவத்தொழில் நடக்கும்போழ்தத்து அறிவுடையொருவன் காணின் அவன்மனம் எத்துணைத் துன்பமெய்துமென்பதனைச் சிறிது சிந்திப்பின் நன்குபுலனும். இவ்வெளிய வுயிர்கண்மாட்டு இரக்கங்கொள்ளாது அவைகள் துன்புறுவதைக் கண்டின்புறூஉம் இவர்கள் நெஞ்சு கன்னெஞ்சோ! வன்னெஞ்சோ! மற்றென்னெஞ்சோ! அறியேன். அறிஞரெல்லாம் வெறுக்கும் இவ்வற்பத்தொழிலை உறுதிபயக்குந் தொழிலெனக் கருதி நிதிக்குவியல்களை வாரியிறைத்து உயிர்க்கு ஊறஞ்சாத இவர்கள் அறக்கதிராழி திறப்பட வுருட்டி ஆழிசூழுலகினை அரசுபுரிதல் எங்ஙனங் கூடுமென ஐயுறுகின்றேன். இவர்கள் பக்கலில் நின்று இச்சை பலபேசும் கொச்சைமக்கள் இவ்விழிதொழிலைப் புகழ்ந்துரைத்து உண்டியும் உடையும் உறையுளும் பெற்று இன்புற்று வாழ்கின்றனர். இவ்வறிவிலிகள் முத்தமிழ்ப்புலமையும் முறைபரசுரிமையும் இத்தலத்தெய்திய (இறைவர்வழித் தோன்றல்களாகிய) இவர்களைத் தங்கள் மாயவலையில் அகப்படுத்துகின்றனர். இவர்கள் அவர்கள்மாயவலையில் அகப்படுதல் விந்தையினும் விந்தையே. இம்முழுமக்கள் வார்த்தையின் மயங்கி, இவ்விழிதொழிலின் இறங்கித் தம் பதியும், நிதியும், பதவியுமிழந்து பரிதவிக்கும் பார்த்திபர் பலருளரென்பதை யான் பகர்வது மிகையேயாமென்க. இனி பொருசாரார் சேவல்களைவாங்கி நெல்லும் புல்லுந்

தவிடுந் தண்ணீருமிட்டு நன்குவளர்த்து முட்களைச் சீவி விடநீரிற் றோய்த்த கூரிய சிறிய இருப்புமுட்களைக் காலில்இறுகயாத்துப் போர்க்களத்திற் கொணர்ந்து நிறுவுகின்றனர். இவ்வறிவில்லாத சேவல்கள் ஒன்றினொடொன்று செந்நீரோடச் செருச்செய்து மாய்கின்றன. இக்கொடுந்தொழில் நடக்கும்போழ்தத்து உண்டாகிய பெரும்பூசலால் இறந்துபோயவர் எத்துணையோ பலர். இக்கொலைகாரணமாக நியாயத் தலஞ்சென்று நிதிக் குவியலை வாரியிறைத்து நாடிழந்த வரையர் தொகையை யான் நவிலவும் வேண்டுமோ. அன்புடைப்பெரியீர்! இச்சேவல்கள் இயற்றிய இன்னல் ஏதேனும் உளதா? அங்ஙனமிருக்க இவைகளைச் சித்திரவதை செய்வதால் எய்திய சிறிய இன்பம் என்னையோ வறிந்திலேன். இக்கொடுந்தொழில் காரணமாக முன்னையோர் அறவழியில் ஈட்டிய பொருளைச் செலவிடுவதால் இவர்கள் எய்தியபுகழ் இத்துணைத்தென யானறிந்திலேன். இங்ஙனஞ் செலவிடும் பொருட்குவியலைக் கல்வியறிவில்லாது தீத்தொழிலிலிறங்கித் துன்புற்றுக் குலப்பெருமை முதலிய நலன்களைக் கெடுத்துத்திரியும் சிறுவர் முன்னேற்றங்கருதிச் செலவு செய்யின் புண்ணியமும் புகழுமுண்டாகுமே. இதனை இவர்கள் மறந்துநிற்பது அச்சிறுவர்கள் செய்த தீவினைப்பயனென்றே கருதுகின்றேன். இத்துறையிற் செலவுசெய்யின் இவர்கள் குலத்தவர் விரைவில் முன்னேற்றமடைந்து பழைய சீருஞ் சிறப்பு மெய்துவ ரென்ப தென்றுணிபு.

இனியொருசாரார் கொச்சிநாய், கோம்பைநாய், கருநாய், வெண்ணாய், செந்நாய் முதலிய நாய்களை நூற்றுக்கணக்கான வெண்பொற்காசுகளைக்கொடுத்து வாங்கி அவைகள் ஒவ்வொன்றையும் பாதுகாத்தற்கு மாதவேதனமளித்துப் பலரை நியமித்துள்ளனர். அந்நாய்கள் உண்ணுதற் பொருட்டுச் சற்றேறக்குறைய நாளொன்றுக்குப் பதினைந்து வெண்பொற்காசுகளுக்கு மேல் செலவு செய்கின்றனர். பண்டைக்காலத்து வைகறைப் பொழுதில் இவர்கள் அரண்மனையில் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி; கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவிகளின் இனியமுழக்கங்கள் மலிந்தொலித்தன. இக்காலத்தோ அவ்வின்னிசை

முழக்கங்கள் இருந்தவிடந் தெரியாது போக, நாய்க் கூட்டங் களின் முழக்கம் நண்ணுவோரை யச்சுறுத்துகின்றது. இந்நாய் களின் குரைப்பொலி இவர்கட்கின்பம் பயப்பது கலிகாலவிந்தை யாமெனக் கருதுகின்றேன். இந்நாய்களைக் கல்வியறிவு சிறிது மிலராகிய சுயவர் சிலர் பிடித்துவரக் கானகஞ்சென்று அக் கானில்வாழும் முயல், மான், மரை, புல்வாய் முதலிய விலங் கினங்களின்மேல் அந்நாய்களை யேவி வதைசெய்து களிப்புறு கின்றனர். இங்ஙனம் வதைசெய்த மிருகங்களின் விலைப்பொருளை யும், அன்றைய வேட்டத்திற் செலவாகிய நிதிக்குவியலையும் சீர்தூக்குவோமாயின் அணுவிற்கும் மேருவுக்கும் மொப்பிடலா மென்பதில் ஐயமின்றாம்; இவ்வீண் தொழிலிற் செலவாகும் நிதிக்குவியலை இவ்வரையர்கள் ஒருதொழிற்சாலை நிறுவித் தம் மினச்சிறுவர்கள் கொலை களவு முதலிய தீத்தொழிலினிறங்கி வருந்தாவண்ணம் தொழிற்கல்வியைக் கற்பித்தல் நலமெனக் கருதுகின்றேன். இங்ஙனஞ் செய்யின் இவர்கள் இம்மையிற் புகழும் இறுதியிலின்பமும் எய்துவர்களென்பதொருதலைபாம்.

இனி யொருசாரார் தங்கள் அரண்மனையிற் பலமல்லர் களை ஊரேறுபோல வளர்த்து ஒருவரோடொருவர் போர்புரிய விட்டுக் களிக்கின்றனர். இவ்விராக்கதர் ஒவ்வொருவரும் நாளொன்றுக்கு ஐந்துவெண்பொற்காசுகளுக்குமேல் உண்டியி லேயே செலவுசெய்கின்றனர். இங்ஙனம் பலமல்லர்களிருந்து உண்ணின் ஓராண்டில் எத்துணை வெண்பொற்காசுகள் செல வாகுமென்பதை இவ்வரையர்கள் கணக்கெழுதிப்பார்ப்பின் இவ்வினர்களைத் தங்கள் கடைத்தலைவாயிலினுங் காலடியிடா வண்ணஞ் செய்வார்கள் எனக் கருதுகின்றேன். இம்மல்லர் களால் இவ்வரையர்களாவது இவர்களினத்தவராவது அடைந்த வின்பம் இம்மியளவேனும் உளதாவென்பதை யோசிக்கின் நன்கு புலனும். இவ்வசடர்களுக்குச் செலவிடும் பொருள் அங்கணத் துள் உக்கதாம் அமுதுக்கு ஒப்பாகுமென்பதை யான் அறை வவும் வேண்டுமோ? இவ்வரையர்கள் பலருங் குழுமித் தங்குல முன்னேற்றங் கருதிச் சங்கங்கள், கல்விச்சாலைகள், தொழிற்

சாலைகள் நிறுவித் தங்கள் பொருளைச் செலவுசெய்யும் வண்ணம் பன்முறைவணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.

கந்தசாமியார்.

உ

மத்தியகாலச் சோழர் வரலாறு.

தென்னிந்தியாவானது வடநாட்டைப்போலன்றித் தனிப்பட்ட நாடாயிருக்கின்றது; அரசாட்சியும் தனிப்பட்ட தென்னலாம். வெகுகாலமாக இந்நாடு சேர, சோழ, பாண்டியர்களால் ஆளப்பட்டு வந்தது. ஆதிகால அரசர்களை வரிசைப்படுத்திக் கோப்பது இப்பொழுது இயலாத காரியமாயினும், மத்தியகால அரசர் தலைமுறை, குலமுறை ஒருவாறு அறியக்கிடக்கின்றன. அக்காலத்தமிழ்நாட்டு மூவேந்தருள்ளே இதுபொழுதுசோழரது அரசாட்சியைப்பற்றி ஒருவாறு எழுதுவாம்.

பழய சோழவரசர்கள் வலிகுன்றின பிறகு பல்லவர் என்ற வகுப்பினர் தோன்றித் தென்னிந்தியாவை அல்லது தமிழ் நாட்டை யாண்டுவந்தனர். அக்காலத்தில் சோழர் சிற்றரசர்களாகப் பலவிடங்களிலும் தங்கியிருந்தனர் என்று தெரிகிறது. இருந்தாலும் இவர்கள் சோழநாட்டைவிட்டு வேற்றுநாடு புகுந்ததாகத் தெரியவில்லை. அந்நாளில் சோழநாட்டைச் சிற்றரசர்களாக ஆண்டவர்கள் முத்தரையர் என்பார். இவர்கள் தஞ்சையைத் தலைநகராகக்கொண்டு ஆண்டவர்கள். இவர்களுள் பெரும்பிடுகு முத்தரையர் என்பார் பேர் பெற்றவர். இவர்களுக்குச் சமீபத்தில் சோழர்கள் சிற்றரசர்களாக ஆண்டுகொண்டிருந்தனர். முத்தரையர் பல்லவர்களின் சிற்றரசர்களாகி விடவே, அக்காலத்துத் தென்னாட்டிலாண்ட பாண்டியர்கள் பல்லவர்பலத்தைக் குறைக்க முயன்றனர். இவைகளைக் கவனித்துக் கொண்டிருந்த சோழர் தலைவனான விஜயாலயன் கி. பி. அ௫0 வாக்கில் இதுதான் தருண

மென்று பார்த்துப் புதுக்கோட்டைச் சீமையிலுள்ள கொடும்பாளூர்த் தலைவர்களோடு சேர்ந்து பல்லவரை எதிர்க்க ஆரம்பித்தான். இப்போர்களில் பல்லவர் பலவிடங்களிலும் தோற்றனர். நாட்டில் கலவரமுண்டாயிற்று.

அக்காலத்தில் அரசாண்ட பல்லவன் தெள்ளாற்றெறிந்த நந்திவர்ம பல்லவ மல்லனென்பான். இவனே நந்திக்கலம்பகம் கொண்டவன். இவனுக்கு முன் இப்பெயர் தாங்கியோர் இருவராவர். இவனது பாட்டனான இரண்டாம் நந்தியும், இவனது முன்னோனான நந்திவர்மனுமாவர். இவர்களிலிருந்து பிரிக்கவே இவனைத் தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன் என்றுகூறுவர். உதையேந்திரத்துச் செப்பேடுகளிலே ஒன்றில் பாலாற்றங் கரையில் வில்லிவலம் என்ற ஊரைத் தலைநகராகக்கொண்டு குறுநில மன்னனாக ஆண்ட உதைய சந்திரன் என்பான் இந்நந்திக்காக நிம்பவனம், சூதவனம், சங்கரகிராமம், நெல்வேலி, சூரவழுந்தூர் முதலான விடங்களிற் போரிட்டு சித்திரமயனைக் * கொன்று பல்லவனுக்கு இராச்சியத்தை யளித்தான் என்று காணப்படுகிறது. இது கி. பி. அ௫0-க்கும் அ௬௪-க்கும் இடைப்பட்ட காலமாகும். இவனையடுத்தோ எதிர்த்தோ விஜயாலயன் அரசாளத் தொடங்கினான்.

* சித்திரமயன் என்ற பெயருக்குப்பின் 'ப'என்ற ஒரு எழுத்துதான் காணப்பட்டு மற்றைய 'ல்லவ' என்ற எழுத்துக்கள் நிறைக்கப்பட்டிருக்கின்றன. அப்படி நிறைத்தது பொருந்தாது என்று தோற்றுகிறது. அது 'பாண்டிய' என்று நிறைக்கப்பட்டிருக்குமானால் பொருள் பொருந்தும். இதுவரை எழுதினோரெல்லாம் 'பல்லவ சித்திரமயன் என்று கொண்டு நந்தியின் தாயத்தானொருவன் இருந்தானென்றும் அவன் மற்றைய தமிழரசர்களோடு கூடிக் கொண்டு சண்டையிட்டானென்றும் வெவ்வேறு விதமான கதைகூறி இடர்ப்படுவர். அக்காலத்து இவர்களோடு எதிர்த்து நின்றோர் பாண்டியரும் அவரை உள்ளிட்டாரும் என்று கூறுமிவர்கள் இவ்வாறு கூற வேண்டுவதில்லை. நந்திக்குத் தாயத்தாருமில்லையென்பது இப்பர் லாராய்ச்சியாலும் வெளியாகுமொருசெய்தியாம். திரமிள அரசர்களென்றே அப்பட்டயத்தில் காணப்படுவது இதனை வலியுறுத்தும்.

முன்னர் கி. பி. அ௯0-வாக்கில் விஜயாலயன் தலையெடுத்தானென்று குறிக்கப்பட்டது. இவன்தான் சோழராச்சியத்துக்கு அடிகோலியவன் என்று சொல்லவேண்டும். இவனைப்பற்றிப் பழந்தமிழ் நூல்கள் கூறுவன வருமாறு:—

—மின்னருளின்
மேதக்க பொய்கைக் கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திவனு—மீதெல்லா
மெண்கொண்ட தொண்ணூற்றின் மேலு மிருமூன்று
புண்கொண்ட வென்றிப் புரவலனும்—

விக்கிரமசோழ னுலா.

—அணங்கு
படுத்துப் பொறிபனைய பொய்கைக்குப் பண்டு
கொடுத்துக் களவழியாக் கொண்டோன்—அடுத்
தடுத்துச்
சிறுஞ் செறுவிற் றிருமார்பு தொண்ணூறு
மாறும் படுதழும்பி னார்த்தோன்—

குலோத்துங்கசோழ னுலா.

—சொன்மாலை
நல்லவன் பொய்கைக் களவழி நாற்பதுக்கு
வில்லவன் காற்றளையை விட்டகோன்—புல்லார்
தொழும்புடைய வாகத்துத் தொண்ணூறு மாறு
தழும்புடைய சண்டப்பிர சண்டன்

இராசராசசோழ னுலா.

—திண்கவை
வெங்கைக் களவழிப் பாடலுக்கு வில்லவனைக்
கொங்கைத் தளைகளைந்த கோமானுஞ்—செங்குருதிப்
புண்ணூறு தன்றிரு மேனியிற் பூணைத்
தொண்ணூறு மாறுஞ் சமந்தோனும்

சங்கரசோழ னுலா.

இந்நான்கு உலாக்களிலும் பொய்கைக் கவிகொண்டவனெனக் கூறியது பொய்கையார் பாடிய களவழி நாற்பதுங்கொண்ட கோச்செங்கணனை யாகும். இவனுக்குப் பிறகு கூறிய **தோண்ணூற்றறு புண் கொண்டவன்** என்றது சோழவமிசத்தை நிலை நிறுத்திய விஜயாலயனைரும். இவனே முதன்முதலில் தஞ்சையைப் பிடித்துக்கொண்ட வீரன். சோழவமிசப் பெரியோன் என்று திருவாலங்காட்டுப்பட்டயம் சச-சகூ-சுலோகங்களாலும், இவ்வமிசத்திலே வல்லமை பொருந்திய விஜயாலயன் பிறந்து சோழநாட்டில் தஞ்சாபுரி எனும் பட்டினத்தை யுண்டாக்கினன் என்ற கன்னியாகுமரிக் கல்வெட்டாலும் தெரிகின்றது.

இவைகளால் இவன் அதிகமாகப் போரில் முனைந்து நின்று உடல் முழுவதும் புண்பட்டும் தளைக்காது நின்று போர்செய்து சோழ ஆட்சியை நிலைநிறுத்தினனென்று காண்கிறது. இவனது ஆட்சி ஒரு முப்பத்துநான்கு ஆண்டென்பர். இவனது பழமையான கல்வெட்டுக்கள் சில அருகிக்காணப்படுகின்றன. இவனது உ௦-வது ஆண்டுக் கல்வெட்டுக்கள் திருப்பழனம் முதலானவிடங்களில் நல்ல நிலைமையிற் காணப்படுகின்றன. ஆகவே இவனது பேர்தான் மத்தியகாலச் சோழரது தலைமுறையில் முதலாவதாகக் காணப்படுகிறது.

முன்னர் பல்லவராச்சியத்தில் கலவர முண்டாகவே நாடுகலக்க முற்றிருந்தது என்றும், நந்திபோத்தரையனுக்குப் பின்வந்தவன் துங்கபோத்தரையன். இவன் பிறப்பு முதலியவை பாகூர் பட்டயத்தால் நன்ருக விளங்குகின்றதென்றும், இவனை ஈழத்து இரண்டாம் சேனனும், பாண்டியன் மாறவர்மன் பரசக்கரகோலாகலனும் சேர்ந்து குடமூக்கில் அரசிலின்கரையில் எதிர்த்தனரென்றும், மாறவர்மனது மதுரையம்பதி துங்கபோத்தரையன் வசமாயிற்றென்றும் துப்ரேல் துரைமகனர் கூறுவர். இவனது கல்வெட்டுக்கள் வடக்கே திருவாலங்காடு முதல் தெற்கே கோவிலடி, லால்குடி வரையிற் காணப்படுகின்றனவென்று கல்வெட்

டிலாகாக்காரர் கூறுவர். இவன் ௮௮௧-வரை, அதாவது இருபத்தாறுண்டு அரசாண்டான்.

ஆயினும் இவனுடைய காலத்திலேயே சோழராச்சியம் தலையெடுக்க வாரம்பித்ததென்று சொல்லவேண்டும். தங்கனது மகனை அபராஜிதபோத்தவர்மனோடும், அவனது உடனரசனை கங்காகுலத்தோன் முதலாம் பிருதிவிபதியோடும் திருப்புறம்பியத்தில் ஒரு போர்நடந்து அதில் பாண்டிய அரசனை இரண்டாம் வரகுணன் பல்லவர்களால் தோற்கடிக்கப் பட்டனன்.* இவ்வரகுணனோடு கூடியிருந்த அரசர்கள் ஆதித்தனும் ஸ்தாணுரவியுமாவார். இவ்வரலாற்றைக் குறிப்பதற்குச் சாதனமாயிருப்பது தஞ்சை ஜில்லாவிலுள்ள திருநெய்த்தானத்து (தில்லைஸ்தான்ம்) கல்வெட்டுக்கள், அவை பின்வருமாறு:—

(௧) ஸ்வஸ்தி ஸ்ரீ தோண்டை நாடு பாவின பல்யானைக் கோக்கண்டனுயின ராஜகேசரி பத்மனுலும் சேரமான்கோதாணுரவியாலும் தவிசும், சாமரையும், சிவிகையும், திமிலையும், கோயிலும், போனகமும், காணமும், களிற்று நிரையும், செம்பியன் தமிழவேள் என்னும் குலப்பெயரும் பெற்ற விக்கி அண்

* இக்கூற்றுக்கு ஆதாரமாயிருப்பது கங்கவமிசத்தனை இரண்டாம் பிருதிவிபதியின் உதயேந்திரத்துச் செப்புப்பட்டயம் (S. I. I. Vol. II, P. 375-390). இதனில் பிருதிவிபதி தனது குலமுறை கிளத்தும் போது தனது பாட்டனை 'முதலாம் பிருதிவிபதி சிபுறம்பியத்தில் பாண்டியன் வரகுணனைத் தோற்கடித்தபின்னர் அச்சண்டையில் அங்கே இந்திரலோகமடைந்தான்' என்று சொல்லிக் கொள்ளுகிறான். அபராஜிதனும் கங்கனை பிருதிவிபதியும் வரகுணனைத் தோற்கடித்திருந்தால் சோழன் எவ்வாறு தலையெடுத்தான் என்பதும், இவனே (ஆதித்யன்) காளத்தி நாட்டிலுள்ள தொண்டைமானூடு சென்று உயிர்துறந்தானென்பதும் விளங்கவில்லை. இவனது மகனை பராந்தகனுக்கு கங்கனை பிருதிவிபதி பழந்த பாணதிராயன் என்ற பட்டத்தையும் பெற்றானென்பது மேலும் திருப்புறம்பிய ஜயிப்பை ஐயப்படும்படி செய்கிறது. இருக்கிற விடயங்களைக் கவனித்தால் வரகுணன் முதலாயினர் இப்போரில் வெற்றிபெற்றனரென்றே கொள்ளவேண்டியிருக்கிறது. சரித்திரக்காரர் கவனிக்க வேண்டும்.

னன் தேவிவான கடம்பமாதேவி திருநெய்த்தானத்து மகா தேவர்க்கு ஒரு நொந்தா விளக்கினுக்குக் கொடுத்த ஆடு நூறுங் பன்மஹேசுவரரட்சை.

(௨) ஸ்வஸ்தி ஸ்ரீ கோராஜ கேஸரி பன்மற்கு யாண்டு † … ………தேவதானம் திருநெய்த்தானத்து மகாதே………… திமாராசனுயின தட்டி ஒற்றி ஊரன் நிசதி………………க் கெரி வதற்கு கொடுத்தபொன் கஙு-ம் பரா……….[பாண்டிய]ர்வரகுண பெருமானர் ஒரு நொந்தா விளக்கினுக்கு…… இவற்றிற்கண்ட மற்றவைகளைக் கூறுமுன் நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டியது ஒன்று உண்டு. அது என்னவெனில் சோழர்கள் இராஜகேசரி பரகேசரி என்ற பட்டங்களை வகித்ததேயாம். தகப்பன் இராஜ கேசரியாயின் அவனது பிள்ளை பரகேசரி ஆவான். இது வெகு பழமையான காலந்தொட்டு வருவதாகத் தெரிகிறது. கலிங்கத் துப் பரணியிலே,

சுராதிராசன் முதலாக வருசோழன் முனைநாட்
சோழமண்டல மமைத்தபிற கேழுலகையு
மிராசகேசரி புகுந்தபர கேசரிகளா
மிருவராணைபுவி யாணையென நின்றபுகழும்

என்றும்,

நகராதலி தாதிகுஞ்ஜரம் பஞ்ஜரம் ஸ்ரீய:
ராஜகேஸரி வர்மாஸீத்தத்த நயஸ்சோளவர்மண:
ராஜகேஸரிண: புத்ரோ பூஃபதி: பரகேஸரி
அபஃவத் யஸ்ய கோபாக்நி ஸிஃரஸ்தமாஸீத்

விஷத் பலம்

என்ற திருவாலங்காட்டுச் செப்புப் பட்டயம் ௩௦, ௩௧-வது சுலோகங்களிலிருந்தும், முதலில் பெயர்களாக விருந்து பின்னர் விருதுகளாக மாறிவிட்டன வெனத் தெரிகிறது. இப்பட்டங் களைக்கொண்டே இவர்களது பெயரைக் காண்பது சுலபமாகிறது.

† பாதிக்குமேல் வேறு ஒரு கட்டிடம் கட்டப்பட்டிருந்த போதி லும் நமது சரித்திரத்துக்கு வேண்டிய அளவு கல்வெட்டு கிடைக் கிறது.

இதனோடும் நில்லாமல் அவரவர் செய்த பெருஞ் செயல்கள் ஏவையேனு மிருந்தால் அவைகளையுஞ் சேர்த்துச் சொல்வது வழக்கம். ஆகவே ஆதித்தன் ராஜகேசரியாக இவனது தகப்பனும் மகனும் பரகேசரியாவர். பரகேசரி விஜயாலயன், ராஜகேசரி ஆதித்யன், மதுரைகொண்ட பரகேசரி பராந்தகன் என வரும்.

இக் குறிப்பைக்கொண்டு நோக்குவோமாயின் இராஜகேஸரி ஆதித்யனும் சேர அரசன் தாணுரவியும், பாண்டியன் வரகுண பெருமானு நும் ஒரு காலத்தவராய் ஒற்றுமையுடன் வாழ்ந்திருந்தன ரென்பது மேலே குறித்த கல்வெட்டுக்களால் விளங்கும்.

இனி, முற்குறித்த முதற் கல்வெட்டால் ஆதித்ய சோழன் சோழமண்டலத்தோடு நிற்காது தொண்டை நாடு சென்று அந்நாட்டையும் அபராஜிதனிட மிருந்து ஜயித்துக் கைப்பற்றினனென்பது விளங்கும். இதனைத் திருவாலங்காட்டுச் செப்புப் பட்டயத்து சகூ-வது சுலோகமும் வற்புறுத்திக் கூறுகிறது. தொண்டை மண்டலத்தைச் சயித்துக்கொண்டு காளத்திவரை சென்றான். இவன் தொண்டைமானாடு என்னும் ஊரிலிறந்தான். இவனுக்கு இக்காரணம்பற்றித் தொண்டைமா னாற்றூர் துஞ்சின தேவர் என்று பின்னோர் கூறுவாராயினர். ஆண்டு இவனுக்கு ஒரு கற்றளி எடுக்கப்பட்டிருக்கிறது. 'இதற்குக் கோதண்ட ராமேச்சரம் என்ற ஆதித்யேச்சரம் என்றுபேர். மேல்பாதியிலும் ஒரு கற்றளி உண்டு.

இவைகளோடு நில்லாமல் இவன் கொங்கு தேசத்தையும் சயித்தானென்று கொங்கு தேச அரசர்கள் சரிதை கூறும். ஆனால் அதற்குற்ற ஆதாரமான கல்வெட்டுக்கள் காணப்படவில்லை யாயினும் இவன் சேரமானோடு நட்பினனா யிருந்தமை பற்றியும், உலாக்களாலும், பழந்தமிழ் நூல்களாலும் பெறப்படும்.

இவனதுநாடு முதலில் தஞ்சை, திருச்சி ஜில்லாக்களடங்கிய நாடேயாம். அதனையே-

கடல்கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணாட்டுப் பெண்ணை யிருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்.

என்று கூறினர் போலும்.

இவருக்குத் தென்னவன் மாதேவியார் என ஒரு மனைவி யுண்டென்று திருப்பழனம், திருநெய்த்தானத்துக் கல்வெட்டுக் களிலிருந்து தெரிகிறது. இவள் இக்கோவில்களுக்கு மன்னவ னது அரசாட்சி பதினேழாம் ஆண்டில் சில நொந்தா விளக்குகள் வைத்திருக்கின்றனள். இவள் பெயரால் இவள் பாண்டியனது மகளாவாளென்று ஊகிக்கலாம். இவளைத் தவிர்த்து, செம்பியன் மாதேவியார் குலமாணிக்க நம்பிராட்டி யென்றும், திரைமூரன் மகாதேவி யென்றும் இராணிகள் உண்டென்று திருவையாற்றுக் கல்வெட்டுக்களைப் படிக்கத் தெரிகிறது. இவர்கள் முறையே கசு, கசுஎ-ம் ஆண்டுகளில் சில தானங்கள் செய்திருக்கின்றனர். இவர்களைத் தவிர சில போகியாரு முண்டு என்று அறியக் கிடக் கின்றது.

ஆதித்தனுக்கு **கோதண்டராம** னென்றும் **யானைக்கோக் கண்ட** னென்றும் **தொண்டைநாடு பாவினவ** னென்றும் பேர்களுண்டு. இவனுக்குப் பராந்தகன், கன்னரதேவன் என இருபிள்ளைகளுண்டு. கன்னரதேவனது செவிலித்தாய் கடம் பம் விடரி என்பவள் திருவையாற்று மகாதேவர்க்கு ஒரு நொந் தா விளக்குக்கு நிலம் வாங்கி விட்டிருக்கின்றாள். இவனும் சைவ னாகவே பல கோயில்களுக்குத் தானங்கள் செய்திருக்கின்றான். பொன்னம்பலத்தைப் பொன்னால் வேய்ந்தானென்பதற்குப் பல ஆதாரங்களிருக்கின்றன.

(க) நம்பியாண்டார் நம்பியினது திருத்தொண்டர் திருவந் தாதியில் இடங்கழி நாயனாரைச் சிறப்பிக்கும்போது அவர் **தில்லையைப் பொன்மய மாக்கிய ஆதித்தன் குலமுதலோன்** என்று கூறுகிறார் அச்செய்யுள் வருமாறு:—

சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம் பலமுகடு
கொங்கிற் கனக மணிந்தவா தித்தன் குலமுதலோன்
றிங்கட் சடையார் தமரெனென் செல்வ மெனப்பறைபோக்
கெங்கட் கிறைவ னிருக்குவே ளூர்மன் னிடங்கழியே. (கூ௫)

இதனை விரித்தெழுதிய செல்வத்திரு சேக்கிழார் சுவாமிகளும்

குருகுறங்கும் கோனாட்டுக் கொடிநகரம் கொடும்பாளூர் (உ)
அந்நகரத் தினிலிருக்கும் வேளிர்குலத் தரசளித்து
மன்னியபொன் னம்பலத்து மணிமுகட்டிற் பாக்கொங்கிற்
பன்னுதுளப் பசும்பொன்னாற் பயில்பிழம்பர் மிசைபணிந்த
பொன்னெடுந்தோ ளாதித்தன் புகழ்மரபிற்
குடிமுதலோர். (௩)

என்று விரித்துப் பாடுவர். இதற்கு ஆதித்தன் என்னும் பெய ரையுடைய அரசனது குடியிலே தோன்றினவன் என்று பொருள் கொள்ளாது சூரிய வங்கிசத்தான் என்று பொருள் கொள்ளுதல் பொருந்தாதோ வெனின், அது பொருந்தாது. பொருந் தாமைகாட்டுதும். புகழையுடையான் ஆதித்தன் அவன் பொன் னெடுந் தோளன்; இதுவன்றி இவன் பிழம்பர்மிசைப் பொன் வேய்ந்தான்; அது கொங்கினின்றும் கொண்டுவரப்பட்டது; இப்படிப்பட்ட புகழோங்கிய மரபிற்குக் குடி முதலான் என்று பொருள் காணுதலே அமைவுடைத்து. சூரியனுக்குப் பொருந் தாமை கூறிக்காண்க.

இனி இவன் கொங்கினின்றும் பொன்கொண்டுவந்தசெய்தி மூவருலாக்களிலும் காணப்படும்:—

—மீதெலா

மெண்கொண்ட தொண்ணூற்றின் மேலு மிருமூன்று
புண்கொண்ட வென்றிப் புரவலனும்—கண்கொண்ட
கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றங்
காதலாற் பொன்வேய்ந்த காவலனும்—
(விக்கிரமசோழ னுலா.)

இதனில் உடம்பில் தொண்ணூற்றாறு புண்கொண்டவன் விஜயாலயன். பொன்னம்பலம் பொன் வேய்ந்தவன் ஆதித்தன் தானென்பது குலோத்துங்க சோழதேவருலாவால் வலிபெறும்.

—அடுத்தடுத்துச்

சிறஞ்செறுவிற் றிருமார்பு தொண்ணூறு
மாறும் படுதழும்பி னார்த்தோன்—வேறு
பிரமவர்க் கன்கலம்பி ளந்துபொன் கொண்டு
பரமர் திருத்தில்லை பார்த்தோன்– நரபதியார்
தாழமுன் சென்று மதுரைத் தமிழ்ப்பதியு
மீழமுங் கொண்ட விகலாளி

என்பதனுலே விளக்கமாகிறது. இக் கண்ணிகளில் கூறப்பட்ட மதுரையும் ஈழமுங் கொண்டோன் பராந்தகன் என்பது எல்லோருக்கும் ஒப்ப முடிந்ததொரு செய்தியாம். ஆகவே திருத்தில்லை பார்த்தோன் ஆதித்தனே யாகவேண்டும். தொண்ணூற்ருறு புண் கொண்டவன் விஜயாலயன் என்பது முன்னர்க் காட்டப்பட்டது. பிற்காலச் சோழர்களில் முதலாவன் விஜயாலயனுக, இரண்டாவது ஆதித்தனும் அவனையடுத்து அவனதுமகன் பராந்தகனுமே இராச பாரம்பரிய முடையார். மேலும்,

—செங்குருதிப்

புண்ணூறு தன்றிரு மேனியிற் பூணுகத்
தொண்ணூறு மாறுஞ் சுமந்தோனுங்—
கண்ணுதலோன்
நாடகத்தா லானதிரு ஞானத் திருமன்றம்
ஆடகத்தால் வேய்ந்த வபயனும்—

என்று சங்கர சோழ னுலாவிலும் காணப்படும். ஆகையாலே பொன்னம்பலம் பொன் வேய்ந்தவன் ஆதித்தன் என்பதும் அவன் கொங்குநாடு சென்று பிரமவர்க்கன் என்பானது கலம் பிளந்து கொண்டுவந்த பொன்னைக்கொண்டு தில்லைத் திருநடராசனது கோயிலைப் பொன் வேய்ந்தா னென்பதும் பெறப்படும். ஆதித்தன் கொங்கு நாட்டைச் செயித்தானென்று கொங்குதேச அரசர்கள் சரிதையும் கூறுமென்று முன்னரே குறித்துள்ளேன்.

சிங்கத் துருவனைச் செற்றவன் என்றது பல்லவர் அபராஜிதனுகவேண்டும். இவனே ஆதித்தனுல் தோற்கடிக்கப்பட்டவன்

என்று திருவாலங்காடு பட்டயமும் திருக்கழுக்குன்றத்துக் கல்வெட்டுகளும் கூறும்.

(தொடரும்.)

திரு. சோமசுந்தரதேசிகர்,
இலக்கண விளக்க பரம்பரை.

உ

சங்க நிகழ்ச்சி.

பனிக்கால - விரிவுரைகள்.

குரோதன, மாசி, ௩-ஆம் நாள் (14-2-26) ஞாயிறு மாலை சங்கக் கொட்டகையில், உ௫ நாழிகைக்கு, ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அது காலை திருவாளர் K S. இராமசாமி சாஸ்திரியார் (Sub-Judge) அவர்கள் தலைமை வகிக்க, தஞ்சை ஆசிரியர் பழக்கக் கல்லூரியின் தலைமையாசிரியர் திருவாளர் N. S. சம்புநாதையர் B. A., L. T., F. Z. S. அவர்கள் 'சீவதத்துவம்' (Life and Science) என்னும் விரிவுரையை நன்கு இயற்றியருளினர்கள்.

குரோதன, மாசி, ௰ (21—2—26) ஞாயிறன்று, சங்கம் கல்லூரிக் கொட்டகையில் மாலை உ௫ நாழிகைக்கு, திருவாளர் ஐ. குமரசாமிபிள்ளை B. A. அவர்கள் தலைமையின் கீழ் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. அதுபோது தஞ்சை ஆசிரியர் பழக்கக்கல்லூரி மாணவர் ஔவை, துரைசாமிபிள்ளை அவர்கள் "திரு முருகாற்றுப்படை ஆராய்ச்சி" என்னும் அரிய விரிவுரையைத் தெளிவாகவும் இனிமையாகவும் நிகழ்த்தினர். பிறகு திருவாளர் சுந்தரேச ஐயர் அவர்கள் (Collector's Office) திருவருள், எனும் அரிய பொருள்பற்றி சுருக்கமாகவும் இனிமையாகவும் கூறியமர்ந்தனர். அதன் பிறகு கீழ்க்காணும் நான்கு தீர்மானங்கள் அவையோரால் ஒருமித்து நிறைவேறப்பட்டன. அவையாவன:—

I. தஞ்சைமாநாட்டின் கல்விக்கழகத்தார் (Tanjore Dt. Educational Council) பண்டிதர்கள் நிலையினை மற்றைய பழக்கக் கல்லூரி ஆசிரியர்களோடு ஒப்பிட்டுத் திட்டம் செய்ய முன்வந்ததுபற்றி இவ்வவையார் மகிழ்ந்து, அவர்கட்கு வந்தனம் செலுத்துகிறார்கள்.

II. ஆயினும், பண்டிதர்களின் உயர்வு உள்ளவாறு மதிக்கப் படாமைக்கு வருந்துகிறார்கள். அக்கழகத்தார்—

(1) மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டித வகுப்பிற் றேறியவர்களையும் அவர்கட்கு ஒப்பானவர்களையும் 'Secondary grade' என்னும்ஆசிரியர்களுக்கு ஒப்பாகவும், (2) பாலபண்டிதர் அல்லது அவரோடு ஒப்பானவர்களை 'Elementary Higher grade' ஆசிரியர்களுக்கு ஒப்பாகவும், (3) பிரவேச வகுப்பினர் அல்லது அவரொடு ஒப்பானவர்களை Elementary Lower grade ஆசிரியர்களுக்கு ஒப்பாகவும் மதித்தது முற்றும் பொருந்தாதெனத் தெரிவிக்கின்றனர்.

III. இம்மூன்று திறத்தினரையும் முறையே L. T. தேறியவர்கள், F. A. தேறிப் பழக்கம் பெற்றவர்கள், 'நடுத்தரப் பழக்கம்' என்னும் தகுதிபெற்றவர்கள் என்பவர்களொடு ஒப்பாகவாவது வைத்துத் திட்டம் செய்ய அக்கழகத்தாரை வேண்டிக்கொள்ளுகின்றனர்.

IV. இவ்வாறு தகுதிபெற்ற பண்டிதர்களை அவர்கள் ஆட்சியிலுள்ள உதவிபெற்ற பள்ளிக்கூடங்களிலெல்லாம் ஏற்படுத்தவும், அவர்களுக்காக மேற்கூறிய தகுதிகளின்படி பள்ளிக்கூட மாநேசர்களுக்கு உதவிசெய்துவரவும் வேண்டிக் கொள்ளுகின்றனர்.

குரோதன, மாசி கஅ (1—3—26) திங்கள் மாலை $27\frac{1}{2}$ நாழிகைக்குத் திருவள்ளுவர் திருவிழா கொண்டாடப்பெற்றது. வந்தவரனைவோர்க்கும் சுண்டல் முதலிய வழங்கின பிற்பாடு

கூட்டம் தொடங்கப்பட்டது. அப்பொழுது சங்கத்தலைவர் திருவாளர் த. வே. உமாமகேசுவரம்பிள்ளை B. A., B. L., அவர்கள் தலைமை யேற்றனர். அதுபோழ்து சங்கக்கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர், மு. வே. மா. உலகஊழியர் அவர்கள் திருக்குறளின் பெருமை என்பது பற்றித் தெளிவாக நயம்பட எடுத்துரைத்தனர். பின்னர். திருவாளர், சுந்தரேச ஐயரவர்கள் திருக்குறளில் விடுபேற்றிற்கும் வழிகள் சொல்லப் பட்டிருக்கின்றன வென்பதை இனிதாக எடுத்துக் காட்டினர்.

குரோதன, மாசி உச ஆம் நாள் (7—3—26) ஞாயிறு மாலை $27\frac{1}{2}$ நாழிகைக்குச் சங்கக்கொட்டகையில் தஞ்சை, திருவாளர், K. பார்த்தசாரதி ஐயங்கார் B. A., L. T., அவர்கள் தலைமையில், தஞ்சை ஆசிரியர் பழக்கக்கல்லூரித் தமிழாசிரியர் திருவாளர் சிதம்பர ஐயரவர்கள் 'சுக்கிரீவன் நட்பு, என்னும் அரியவிரிவுரை மிகஇனிமையாக யியற்றியருளினர்கள்.

குரோதன, பங்குனி க (14—3—26) ஞாயிறு மாலை $27\frac{1}{2}$ நாழிகைக்குத் தஞ்சை, வழக்கறிஞர் திருவாளர் வேங்கடாசலம் பிள்ளை B. A. B. L., அவர்கள் தலைமையின்கீழ்ச் சங்கக் கொட்டகையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தேறியது. அதுகாலை, கும்பகோணம் வாணாதுறை உயர்தரப் பள்ளிக்கூடத் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் திருவாளர். T. V. சதாசிவப்பண்டாரத்தாரவர்கள் 'சோழர்களும் தமிழ்மொழியும் என்பதை நல்ல ஆராய்ச்சி முறையுடன் இனிமையாக எடுத்துரைத்தனர்.

குரோதன, பங்குனி அ (21—3—26)-ம் நாள் மாலை 5 மணிக்குச் சங்கக்கொட்டகையில் தஞ்சை R. C. School தமிழ்ப்பண்டிதர் திருவாளர். சீநிவாசய்யரவர்கள் தலைமையின் கீழ் ஒரு கூட்டம் நிகழ்ந்தது. அதுபோது திருவாளர் சுந்தரேசய்யரவர்கள் "பழமொழி விளக்கம்" என்ற தலைப்பின் கீழ், அநேக பழமொழிகளை எடுத்துக்கொண்டு அதன் வேதாந்தப் பொருள்களைத் தெளிவாக எடுத்துக் காட்டினர்கள்.

கல்லூரி நிகழ்ச்சிகள்.

1. திருவள்ளுவர் நாளாய குரோதன, மாசி, கஅ (1-3-26) நாள் காலையில், 6, 7, 8ம் வகுப்புகளுக்குத் திருக்குறட் பரீட்சை ஒன்று நடத்தப்பட்டது. அதற்குத் திருவாளர் V. கோவிந்த சாமி நாயுடு அவர்கள் வினாத் தாள்கள் குறித்துக் கொடுத்தருளினர்.

அப்பரீட்சையில் முதன்மையாக நிற்கிற மாணவர்களுக்குப் பரிசுகள் அடுத்த ஆண்டுவிழாவில் கொடுப்பதாகச் சங்கத்தார் தெரிவித்திருக்கிறார்கள்.

2. குரோதன மாசி ரு (16—2—26)ம் நாள் (தஞ்சை, 'Assitant Registrar of Co-operative Societies' ஆகிய) திருவாளர். சிவ சுப்பிரமணிய பிள்ளையவர்கள் தமது தந்தை தினமாகிய அன்று கல்லூரி மாணவர்கள் இருநூற்றுவருக்கு மேலாயவர்க்கும் சிறந்த விருந்து அளித்தார்கள்.

3. குரோதன மாசி 13(24—2—26)ம் நாளன்று, கரந்தை நிலக்கிழவர் சா. சண்முகசுந்தரம் பிள்ளையவர்கள் தமது தந்தையின் நினைவுகூர்தற் பொருட்டுக் கல்லூரி மாணவர்கள் பதின்மூன்று பேர்க்கு ஆடைகள் உதவியருளினர்.

மேற்கூறிய இரண்டு அறங்களும் நன்முறையில் செய்யப்பட்டனவென்றே சொல்லவேண்டும். இவ்வாறு ஒவ்வொருவரும் இத்தகைய அமயங்களில், தங்கள் கடமைகளைச் செய்வார்களானால், உறுதியாய் இச்சங்கத்தில் ஒரு விடுதிச்சாலை ஏற்பட்டு விடும்.

மேற்கூறிய நல்ல காரியங்களைச் செய்த இருவரும் எல்லாப் பேறுகளும் பெற்றுச் சுகமாக நீடூழிவாழுமாறு இச்சங்கத்தார் திருவருளை வேண்டுகின்றனர்.

உமா. பஞ்சாபிகேசன்.

மாணவர் பக்கங்கள்.

உ

நிலாப் பாடம்.

ஆசிரியர் சுந்தரம் பிள்ளையும், அவர்தம் அருமை மாணவர்களும் இந்தப் பங்குனித் திங்கள் (=மாதம்) வளர்பிறையில், ஒரு வாரமாக, மாலையில், விண்ணாற்றங்கரைக்குப் போய், எட்டு மணிக்குத்தான் வீடுவந்து சேருகின்றார்கள். சுந்தரம் பிள்ளை தன் பெயரைப்போலவே இனிய குண அழகும் உடையவர். அவர்தம் இனிய குணமும், கனிபோன்ற பேச்சும் அவருடைய கூர்மையான அறிவையும், நிறைந்த கல்வியையும் 'பொன்மலர் மணம் பெற்றது' போலச் சிறப்பிக்கின்றன. ஒரு நாளும் தவிராமல், மாலைக்காலத்தே, தங்கள் பந்தினையும், சிற்றுணவினையும் விட்டுவிட்டு, அலுப்புச் சலிப்பு அடைதலின்றி, மலர்ந்த முகத்துடன் அவர்பின் போய்வரும் பல சிறுவர்கள் செயலே அவர் தம் பெருமைக்கு ஒரு அடையாளமாகும்.

விண்ணாற்றிற்கு மாலையில் இரண்டு மூன்று நாழிகைப்பொழுதிருக்கப் போய்ச்சேரும் இவர்கள், வெளியே போய்வந்து, கால் கை முகங்கழுவிக்கொண்டு, தண்ணீர் இறைக்கும் இடத்திற்கு (Pumping Station) நேரேயுள்ள மணல்மேட்டில் வந்து சேருவார்கள். ஒன்றரை நாழிகைக்குமேல், பிள்ளைகள் தங்கள் தங்கள் மனம்போல் ஊற்றுத்தோண்டியும், கோயில் கோபுரங் கட்டியும், பலீங் கிடு கிடு ஆடியும், உப்புக்கோடு மருவியும் விளையாடிக் கொண்டிருக்க, ஆசிரியரோ, நீராடி, மாற்றுடையுடுத்துத் திருநீறுஅணிந்து, ஓரிடத்தமர்ந்து, கடவுளைத் தொழுதுகொண்டிருப்பர். பின்னர், ஆசிரியர் மாணவர்பக்கம் திரும்பவே, அவர்களும் விளையாட்டினை நிறுத்தி, மீண்டும் முகம் கைகால்களைக் கழுவித் திருநீறணிந்து, இறைவனையும் ஆசிரியரையும் தொழுது கொண்டு, தங்கள் ஆசிரியரை அணுகி உட்கார்ந்து கொள்வார்கள். சுந்தரம் பிள்ளையும் அவர்தம் மாணவர்களும் தாயும் சேய்களும் போல நெருங்கியுட்கார்ந்திருக்கும் அழகினையும், அம்

மாணவர்கள் அவர்தம் அருமை முகத்தினைத்தேவர்களைப்போல இமையாது பார்த்துக்கொண்டிருக்கும்எழிலினை(= அழகினை)யும் ஒருமுறையாவது பார்த்து மகிழாதவர்கள் அடுத்த சித்திரை நிலாவிலாவது பார்த்து மகிழ்தல் வேண்டும். முற்காலத்தில் நளன் தன் மனைவி மக்களோடு, நற்காலம்பெற்று மீண்டும் தன் நகரத்திற்கு வந்தபோது, அந்த நகரத்து மக்கள், 'மேகத்தைக் காணுதிருந்து கண்ட மயிலெனவும், கண்ணைப் பெறுதிருந்து பெற்ற முகமெனவும், நீரைப் பெறுது வாடியிருந்து பெற்ற பயிரெனவும் மிக, மிக மகிழ்ந்தார்கள்' என்ற பொருளில் புகழேந்திப் புலவர் பெருமான்

> கார்பெற்ற தோகையோ! கண்பெற்ற வாண்முகமோ!
> நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ!—பார்பெற்று
> மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகர்க்(கு)
> ஏதோ வுரைப்பன் எதிர்

என்று பாடியுள்ளார் அல்லவா? சுந்தரம்பிள்ளை இனிய முகத்தை அவர் மாணவர் பார்த்திருக்கும் இக்காட்சிக்கும், அப்புலவரது அழகிய அடிகளையே வைத்துக்கொண்டு,

> 'கார்பெற்ற தோகையோ! கண்பெற்ற வாண்முகமோ!
> நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ!'—ஏர்பெற்ற
> சுந்தரனுர் அன்பொழுகும் தூமுகத்தை, அன்னவர்தம்
> மைந்தரனுர் பெற்றிருக்கும் மாண்பு

என்று பாடிமுடிப்பது பொருந்துவதேயாகும்; பொய்ப்புகழ்ச்சியாகாது.

நிலாப்பாடம் தொடங்கி ஒருவாரம் ஆகிய பின், முழுமதி (பூரணச் சந்திரன்) நாள் வந்தது. ஆசிரியர் தம் மாணவர்களைப் பார்த்து, 'என் அருமைச் சிறுவர்களே! இன்றை மதியைப் பாருங்கள்!' என்று தொடங்கி ஏதோ சொல்லப் போகுமுன், ஒரு மாணவன் தன் மகிழ்ச்சியை அடக்கமுடியாமல், ஐயா! இன்று மிக அழகாக விருக்கிறது என்றுன். ஆசிரியர் தலையை அசைத்துக்கொண்டு, ஆம், சோழ நான் சொல்ல நினைத்ததும் அதுவே என்று கூறி, எங்கே பார்ப்போம்! இந்த இனிமையை

எடுத்துக் காட்டும் ஒரு பாட்டினை யாரேனும் கூறுங்கள் என்ன, மாணவர்கள் சற்றுநேரம் எண்ணிப்பார்த்தார்கள். கண்ணப்பன் துள்ளி எழுந்து மண்டிபோட்டுக்கொண்டு, ஐயா! எனக்குத் தெரிந்துவிட்டது, எனக்குத் தெரிந்துவிட்டது, "அங்கண் விசும்பில் அகனிலாக் காண்பினிதே" என்று கூறினன். ஆசிரியர் கெட்டிக்காரன்! என்று கூறி, அப்பாட்டின் அழகினைப் பாருங்கள்! திங்கள் பொதுவாக மகிழ்ச்சியைத் தருவதாக விருந்தாலும், இன்று போல முழுத்திங்கள் தரும் மகிழ்ச்சிதான் மிகப் பெரிது என்பதை இனியவை நாற்பது பாடிய பூதஞ்சேந்தனுர் என்னும் புலவர் அகல்நிலாக் காண்பு இனிது என்று எடுத்துக் காட்டியுள்ளார். இது போலவே, அவ்வடியிலுள்ள மற்றோர் சிறப்பினை உற்றுநோக்கிக் கூறுங்கள் என்றார். சற்று நேரம் எண்ணியபின், மாணிக்கம், ஆசிரியர் முகத்தினைப் பார்க்க, ஆசிரியர், சொல் பார்ப்போம் என்றனர். 'அகல் நிலா' மிகுந்த மகிழ்ச்சி தருவதாக விருந்தாலும், வானம் மப்பு மாசின்றி யிருத்தல் வேண்டும். அப்போது தான் மிக மிக இனிமையாக விருக்கும். இதனாலேதான் அங்கண் விசும்பில் அகனிலா என்று கூறியிருக்கிறார் என்றான். மாணவர்கள் எல்லோரும் மாணிக்கத்தின் உரையைக்கேட்டு வியந்தார்கள். ஆசிரியர் மகிழ்ந்தார்.

பின்னர் ஆசிரியர், நல்லது மாணவர்களே! இன்று முழுமதியானதால், முழுமதியைப்பற்றிய சிலவற்றை முதலில் தெரிந்து கொள்ளுவோம். மற்றையநிலாநாட்களிலில்லாமல், இன்றைக்கு மட்டும் நடக்கக்கூடிய செயல்களைச் சொல்லுங்கள் பார்ப்போம் என்றார். முருகையன் ஐயா! நான் சொல்லுகிறேன். இன்றைக்குத்தான் 'கிரகணம்' உண்டாகும் என்றனன். ஆசிரியர், ஆம், இன்றென்று உண்டு. அதுவோ, இன்றைக்குத்தான் கடல் மிகுதியாகப் பொங்குவது. அது இருக்கட்டும். முதலில் கிரகணம் என்பது யாது? அது எப்படி உண்டாகிறது? என்று நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். கிரகணம் என்ற வடமொழிக்குப் பற்றுதல் அதாவது பிடித்தல் என்று பொருள். இராகு என்னும் பெயருடையதோர் பாம்பும், கேது என்றபெய

ருடைய தொரு பாம்பும் ஞாயிற்றினை (சூரியனை)யும் திங்களையும் பிடித்துக்கொள்ளும், பிறகு விட்டுவிடும் என்பது நம்முன்னோர் கொள்கை. ஆனால், உண்மையில் அத்தகையபாம்புகளும் இல்லை. அவை பிடிப்பதும் இல்லை. பூமி சூரியனைச் சுற்றுவதும், புவியை மதியம் சுற்றுவதும் நீங்கள் படித்திருக்கிறீர்களே. இவ்வாறு சுற்றிக்கொண்டு வரும்போது, ஏதோ ஒரு காலம், சூரியனுக்கும், அதன் ஒளியை முழுதும் பெற்றுப் பூமிக்குத் திருப்பித் தந்து கொண்டிருக்கும் முழுமதிக்கும் நடுவில், பூமியின் ஒரு கோடி வருவதுஉண்டு. இப்படி வரும்போது பூமி மறைப்பதால் சூரியன் ஒளியை இழக்கும் மதியின் பகுதியையே ‘சந்திர கிரகணம்’ என்பார்கள். இப்படியேதான் சூரிய கிரகணமும் உண்டாகும். சூரியனுக்கும் அதன் ஒளியைப் பெற்றுக்கொண்டிருக்கும் பூமிக்கும் நடுவில், பூமியைச் சுற்றிவரும் சந்திரன் எப்போதாவது வந்து விடும் அப்போது சந்திரனால் மறைக்கப்படும் சூரியனின் பகுதிக்குத்தான் சூரிய கிரகணம் என்றுபேர் என்றுகூறி, அதனைநன்கு விளங்கச்செய்ய ஒரு மாணவனை நிறுத்தி இருவர்களைப் பூமிபோலவும் சந்திரன்போலவும் சுற்றிவரச்செய்து விளக்கிக் காட்டினர். பிறகு அவர் இவ்வுண்மையை நமது முன்னோர்கள் முற்றும் உணரவில்லையென்று திட்டமாகச் சொல்லுதலும் இயலாது. அவர்கள் இராகுவினையும், கேதுவினையும் ‘சாயா கிரகங்கள்’ என்று கூறியிருக்கின்றார்கள். சாயா கிரகங்கள் என்றால் நிழலாகிய கிரகங்கள் என்பதுதான் பொருள். இத்தகைய நிழல்களையே இராகு கேது என்று பெயர் வைத்து இரு கிரகங்களாகக் கொண்டிருக்கின்றார்கள் என்றும் எண்ணக்கூடும். இது எப்படியாவது இருக்கட்டும். இனி, நமது அருமைத் தமிழ் நூல்களில் இந்தப் பாம்புகோளைப் (கிரகணத்தைப்)பற்றி ஏதேனும் நீதி கூறிய பாட்டு உளதாயின் எடுத்துக்காட்டுங்கள் என்றார். வழக்கம்போற் சற்று எண்ணியபின், கண்ணப்பனே-

ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉம் திங்கள்போல்
செல்லாமை செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற் (கு)
ஒல்கார் குடிப்பிறந் தார்.

என்னும் நாலடியாரின் பாட்டினைக் கூறினன். ஆசிரியர் நம் கண்ணப்பனுக்கு நினைவாற்றல் (ஞாபக சக்தி) நன்றாகவிருக்கிறது என்றுகூறி, இந்தப்பாட்டில் திங்களின் எந்தச்செயல் பாராட்டப்படுகிறது? மணிவண்ணா! நீ சொல் என்ன, அவன் திங்கள் தனக்கு ஒரு தீங்கு வந்திருந்தாலும் அதனைப் பாராட்டாமல் பிறர்க்குச் செய்யும் நன்மையைச் செய்துகொண்டிருக்கும் என்றனன். ஆசிரியர், நல்லது, இப்பாட்டின் பின் இரண்டடியின் பொருள் என்ன என்று பார்ப்போம். சோமு! நீ சொல்: பின் அடிகள் யாருடைய செயலை எடுத்துக்காட்டுகின்றன? என்ன, சோமு, உயர்ந்த குடிப்பிறந்தார் செயலைக் காட்டுகின்றது என்றான். ஆசிரியர், ஆம் உயர்ந்த குடிப்பிறந்தாரின் சிறந்தசெயல் ஒன்றைத்தான்: அது யாது? மணிவண்ணா! நீ கூறு என்ன, மணிவண்ணன் ஒப்புரவு செய்தல் என்றான். ஆம், அதன் பொருள் என்ன என்று ஆசிரியர் மீண்டும் கேட்க, அதாவது உலகநடையை ஒட்டிய தன்கடமையைச் செய்தல் என்றான். ஆசிரியர் நன்று, குடிப்பிறந்தார்க்கும் மற்றவர்க்கும் உள்ள வேறுபாடு ஒன்று இதில் குறிக்கப்பெற்றுள்ளது. அதனை, மாணிக்கம்! நீ கூறமுடியுமா? என்ன, மாணிக்கம் எண்ணிப்பார்த்துத் தெரியவில்லை ஐயா! என்றனன். நல்லது, நான் கூறுகின்றேன். வேறு ஒன்றுமில்லை. குடிப்பிறந்தார்போல மற்றவர்களும் தங்கள் கடமைகளை ஏதோ ஒருவாறு செய்து வருவதும் உண்டு. ஆனால், பொருள்வளங் குறைந்தால் மற்றவர் தங்கள் கடமைகளைக் கை நழுவ விட்டுவிடுவார்கள். குடிப்பிறந்தாரோ, வருந்தி நிற்கும் வறுமைநிலையிலும் தங்கள் கடமைகளை எவ்வாறாயினும் செய்துதான் வருவார்கள் என்பதுதான். இந்தப் பகுதியின் பொருளாவது:—செல்லாமை—வறுமை, செவ்வன் நேர் நிற்பினும்—நன்றாக நிலைபெற்று நின்றாலும், ஒப்புரவிற்கு—உலகநடையறிந்து செய்யுங் கடமைகளுக்கு, குடிப்பிறந்தார்—உயர்குடிப் பிறந்தவர்கள், ஒல்கார்—பின் வாங்கார் என்பதாகும் என்று கூறி வந்தவர், நல்லது மாணவர்களே! மதியம் எப்போதோவரும் இந்தப் பாம்பு கோளின் காலத்தில் தன் வருத்தம் பாராட்டாமல் உலகிற்கு நன்மைசெய்தல் புதிதன்று. அக்குணம் அதற்கு

என்றும் இயற்கையாகவுள்ளது. தன்னிடத்தில் எப்போதுமிருக்கும் களங்கமாகிய க்றையினையும் போக்கிக்கொள்ள முயலாமல் உலகத்து இருளைப்போக்கிக் கொண்டிருக்கும் என்று ஒரு பாட்டிற் படித்திருக்கின்றீர்கள் அல்லவா? அந்தப்பாட்டை **நடராசன்!** நீ கூறு என்றார். உடனே நடராசன்,

> தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
> வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்—திங்கள்
> கறையிருளை நீக்கக் கருதா துலகின்
> நிறையிருளை நீக்குமேல் நின்று

என்ற **நன்னெறிப்** பாட்டினைக் கூறினன். ஆசிரியர், நல்லது, இந்தப் பாட்டும் முன்பாட்டைப் போன்ற ஒரு நீதியைக் காட்டுவதே யாகும். இப்பாட்டின் பின்னடிகளின் பொருள் எளிதாகத் தெரிகின்றதல்லவா? விழுமியோர்—மேலோர், தங்குறை-தமது துன்பங்களை, தீர்வு உள்ளார்-நீக்கிக் கொள்ளுதலை நினையாராய், பிறர்க்கு உறும்-மற்றவர்களுக்கு வரும், வெங்குறை-கொடிய துன்பங்களை, தீர்க்கிற்பார்-நீக்கி விடுவார்கள் என்பது முற்பகுதியின் பொருள் என்று கூறி முடித்தார். அதன்மேல், மாணிக்கம், ஐயா! கறையென்று பாட்டில் வந்திருக்கிறதே. அதை 'ஔவை' யென்று சொல்லுகின்றீர்களே, அதன் உண்மை என்ன என்று கேட்டான். ஆசிரியர், நல்ல கேள்வி, இந்தக் களங்கத்தினைக் கறையென்றும், ஔவை யென்றும், மான் என்றும் முயல் என்றும் நம்மவர் கூறிவருகின்றார்கள். பாட்டிகள் கதை சொல்லும்போது—பண்டைக்காலத்தே வானம் தலையில் இடிக்கக்கூடிய அவ்வளவு அண்மையில் (கிட்டத்தில்)இருந்தது: கூட்டிக் கொண்டிருந்த ஒரு கிழவி நிமிர்ந்தபோது அவ்வானத்தில் இடிபட்டதனால் வருத்தமுற்று அவ்வானைத் தன் விளக்குமாற்றினால் அடித்து 'எட்டுவண்டி நூலுக்கும் எட்டாமற்போ! பத்து வண்டி நூலுக்கும் பற்றாமற் போ' என்று வைதாள்: உடனே அவ்வானம் அவளையும் தூக்கிக்கொண்டுபோய்விட்டது: அவளே அம்புலியில் காந்தியடிகளைப்போல நூல் நூற்றுக்கொண்டிருக்கின்றாள் என்று கூறக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இம்மாதிரி

யான பாட்டிக்கதைகளும், அவற்றில் நம்பிக்கையும் நம் நாட்டில் மட்டும் உள்ளன வென நீங்கள் நினைக்கவேண்டாம்; ஆராய்ச்சி மிக்க ஐரோப்பாக் கண்டத்தில்தான் இவை அதிகம். இந்தக் களங்கத்தைப்பற்றி அங்கே வழங்கும் பாட்டிக்கதை யொன்றுண்டு. அது பண்டைக் காலத்தில் ஒருவரும் ஒரு வேலையும் செய்யாமல் ஓய்வுற்றிருக்கத்தக்க ஞாயிற்றுக்கிழமையில் ஒரு விறகுவெட்டி யானவன் மற்றை நாட்களைப் போலவே விறகு வெட்டிக் கட்டி முதுகில் சுமந்துகொண்டு வந்தான். ஒரு தெய்வம் அவன் முன்தோன்றி, இன்று ஞாயிறு அன்றோ! நீ இப்படி வேலைசெய்தல் தகுமா? என்று கேட்க, அவ்விறகு வெட்டி இந்த உலகில் ஞாயிறானாலும் (சந்திரனைக் காட்டி) அந்த வுலகில் திங்களானாலும் எனக்கென்ன என்றுகூற, அது கேட்டு முனிந்த அத்தேவன் அவனைத் திங்களுலகிற்கு அனுப்பிவிட்டான். அது முதல் அவ்விறகுவெட்டி தன் விறகு கட்டை முதுகில் ஏந்திக் கொண்டு அங்கிருக்கிறான் என்பதாகும். இப்படியே முயல், மான் முதலியவைகட்கும் கதைகள் கூறப்படலாம். இவ்வாறு உலக வழக்கில் மட்டுமன்று, நூல் வழக்கிலும் இந்தக் களங்கத்தினை முயல், மான் என்றெல்லாம் பெயர் வைத்து நீதி கூறிய பாட்டுக்களை நீங்கள் படித்திருக்கலாமே. **உடற்குவரும்** என்று தொடங்கும் நன்னெறிப் பாட்டினைக் கூறுங்கள் என்ன, **முருகையன்** முந்தி,

> உடற்கு வருமிடர்நெஞ் சோங்குபரத் துற்றோர்
> அடுக்கு மொருகோடி யாக—நடுக்கமுறார்
> பண்ணிற் புகலும் பனிமொழியாய்! அஞ்சுமோ
> மண்ணிற் புலியைமதி மான் என்று கூறினான்.

ஆசிரியர் இதில் மதியில் உள்ள **மான்** உலகத்துப் புலியை அஞ்சாது என்று கூறியிருப்பதைப் பார்த்தீர்களா? திங்களை அடைந்ததனால் மான் எப்படி உலகத்துப்புலியை அஞ்சாதோ அதுபோலத் தங்கள் நெஞ்சினை உயர்ந்த பரம்பொருளாகிய கடவுளிடத்தே சேர்த்தவர்கள் அதாவது எப்போதும் கடவுளையே நினைந்திருப்பவர்கள் தங்கள் தங்கள் உடம்பிற்குவரும் துன்பங்

கள் கோடிக்கணக்காக ஆனாலும் அவற்றிற்கு அஞ்சமாட்டார்கள் என்ற கருத்தைச் **சிவப்பிரகாச அடிகள்** இந்த நன்னெறிப் பாட்டில்-ஒங்குபரத்து உற்றோர், உடற்குவரும் இடர் அடுக்கும் ஒரு கோடியாக நடுக்கமுறார்-என்று எவ்வளவு அழகாக அமைத்திருக்கிறார் பார்த்தீர்களா? இவ்வாறே, இக்களங்கத்தை முயலென்று வைத்துக்கூறும் நாலடியாரின் பாட்டொன்று உண்டு அதுதான் **ஒண்கதிர் வாண்மதியம்** என்று தொடங்கும் பாட்டு. அதனை யாரேனும் கூறமுடியுமா? என்று கேட்டார். கன்னப்பன்,

> ஒண்கதிர் வாண்மதியம் சேர்தலால் ஓங்கிய
> அங்கண் விசும்பின் முயலுந் தொழப்படும்;
> குன்றிய சீர்மைய ராயினும் சீர்பெறுவர்
> குன்றன்னார் கேண்மை கொளின்; என்றான்.

ஆசிரியர், ஆம், ஆம், முருகையா! முதலிரண்டடியின் கருத்தினைக் கூறு என்ன, திங்களைச் சேர்ந்திருத்தலால் முயலும் தொழப்படும் என்றான். ஆசிரியர், நல்லது, மணிவண்ணா! பின்னிரண்டடியின் கருத்தினை நீ கூறு என்ன, அவன் பெருமையிற் குறைந்தவர்களும் ஒரு குன்றைபோன்று நிறைந்த பெருமையுடையவர்களைச்சேர்ந்தால், தாங்களும் பெருமையுறுவார்கள் என்பதாகும் என்றான். ஆசிரியர், நன்று கூறினாய் என்றார். பின்னர் ஆசிரியர், இம்மறுவை (களங்கத்தை) உவமையாகக்கொண்டு எழுந்த இன்னும் ஒரு நீதிப்பாட்டு நினைவில் வருகின்றது. அது நமது தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் கூறிய திருக்குறளாகும். அதன் கருத்து, உயர்ந்த குடியிற் பிறந்தவரிடத்து உளதாகும் குற்றம் சிறிதாயினும், அது மதியினிடத்துக் காணும் மறுப்போலப் பெரிதாக யாவர்க்கும் காணப்படும் என்பதாகும். அக்குறள்—"குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம், விசும்பின்-மதிக்கண் மறுப்போல் உயர்ந்து" என்பதாகும். ஆகவே, உயர்க்குடியிற் பிறந்தோர்-சான்றோர்-தங்கள் ஒழுக்கத்திலாகட்டும், சொல்லிலாகட்டும், எண்ணத்திலாகட்டும், சிறிதுங் குறையில்லாதவாறு மிகுந்த கருத்துடன் நடந்துகொள்ளுதல் வேண்டும். சான்றோரைத் திங்களோடு ஒப்பிட்டுக்கூறும் பாட்டுக்கள்

பல. ஒரு பாட்டு மட்டும் திங்களைவிடச் சான்றோர் சிறந்தவர் என்று கூறுகின்றது. அது கூறுங்காரணம்—மதிக்குக் களங்கம் உண்டு. ஆனல், சான்றோருக்கோ களங்கம் சிறிது இராது என்பதாகும். நான் கூறிய அளவில், அப்பாட்டு இன்னதென உங்கட்கு விளங்கியிருக்கலாம். அதுவே **அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்** என்று தொடங்கும் நாலடிப்பாட்டு என்ன நடராசன்

அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன்—திங்கள்
மறுவாற்றும் சான்றோரஃ தாற்றார், தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின் என்றுகூறி முடித்தான்.

பின்னர், ஆசிரியர், களங்கம் உண்மையில் ஒளவையும் அன்று, விறகு வெட்டியும் அன்று, முயலுமன்று, மானுமன்று. சூரியன் ஒளி மதியில் பாயும்போது அங்குள்ள சில இடங்களிற் படுவதில்லை. ஆழ்ந்த பள்ளத்தாக்குகள், எரிமலைத் திறப்புக்கள் மலையின் சரிவுகள் முதலிய இடங்கள் இவ்வாறு சூரிய ஒளிபடாமல் இருண்டிருக்கின்றன. இந்த இருட்டே நமக்கு மறுவாகக் காணப்படுகின்றது என்று விளக்கினர். அதன்பின்னர், இன்றைய தினம் தான் கடல்மிகுந்து பொங்குவது என்று முதலிற் கூறி, விட்டுவிட்டோமல்லவா? அதை இப்போது எடுத்துக் கொள்ளுவோம். கடல் பொங்குவது பற்றிச் சிறந்தநீதி அமைத்துப்பாடிய நன்னெறிப்பாட்டினைக் **கல்யாணசுந்தரம்**! நீ கூறு! என்ன, கல்யாண சுந்தரம் சிறிது நேரத்திற்குள்,

இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்றும் மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய்! பொங்காது அழற்கதிரால்
தண்ணென்
கதிர்வரவாற் பொங்கும் கடல்- என்று கூறினன்.

மாணவர்களே! இன்சொலின் இனிமை இந்தப் பாட்டில் எவ்வளவு இனிமையாகக் கூறப்பட்டிருக்கிறது பாருங்கள்!

உலகம் இனிய சொல்லுக்கு வசப்பட்டு நடத்தலும், வன்சொல்லுக்கு வசப்படாமையும், கடலானது மிகச்சுடும் சூரிய வெப்பத்திற்குப் பொங்காது, மதியின் குளிர்ச்சிக்குப் பொங்கும் உவமையால் எடுத்துக் காட்டிய திறமை எந்த மொழியிலுள்ள எந்தப் புலவருக்கும் எய்திலது. நல்லது, கடல் பொங்குவதின் உண்மை என்ன என்று பார்க்கவேண்டாமா? என்ன, மாணவர்கள் ஆம் ஐயா! அதனை கூறுங்கள் என்றார்கள். ஆசிரியர், மாணவர்களே! இந்த உலகிற்கும் மதிக்கும் மற்றக் கோள்கள் (கிரகங்கள்) மீன்கள் (நட்சத்திரங்கள்) ஆகிய எல்லாவற்றிற்கும் ஒன்றை ஒன்று பற்றி இழுத்தல் என்கிற ஒரு ஆற்றல் (சக்தி) இருக்கிறது. இந்த ஆற்றல் சேய்மை (தூரம்) அண்மை (கிட்டம்) களுக்கு ஒத்தபடி, ஒரு காலத்தில் அதிகப்படும்; ஒரு காலத்தில் குறையும். மதியானது பூமிக்கு அண்மையில் வருங்காலை பூமியை வேகமாக இழுக்கின்றது. பூமி, நீர்ப்பாகமும், நிலப்பாகமும் என இருவகைப்படும் அல்லவா? நிலப்பாகத்தைவிட நீர்ப்பாகம் எளிதில் இழுக்கப்படலால் நீர் நிலத்தைவிட மேலே எழும்பிவிடுகின்றது என்றார். கண்ணப்பன், அப்படியானால் திங்கள் இந்த உலகைச் சுற்றி வருவதால், அது நெருங்கவருகிற இடங்களிலெல்லாம் கடலும் பொங்கிக்கொண்டே போகுமோ என்ன, ஆசிரியர், கண்ணப்பன் நுண்ணறிவை மெச்சி, ஆம் அப்படியேதான் என்று கூறி, மணலில் கோடிட்டு விளக்கிக் காட்டினார். இதனோடு இன்றைப் பாடத்தை முடித்து கடவுள் வாழ்த்தும் தமிழ்த் தெய்வ வாழ்த்தும் கூறி வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

(தொடரும்)

உ

கடிகாரம் வருமுன் கால அளவு.

இப்பொழுது பெரும்பாலும் ஒவ்வொருவர் வீட்டிலும், ஒவ்வொருவரிடத்திலும் நாழிகை யறியுங் கடிகாரங்கள் இருக்கின்றன. நாட்டுப்புறங்களிலும் நகரிலும், சிறுவர்களும் மணிக்கணக்கே அறிந்து கூறுகின்றனர். கடிகாரம் எப்பொழுது எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டதென்பது பின்னே எழுதப்படும். கடிகாரம் வருமுன் மக்கள் எவ்வாறு நாழிகை முதலிய கால அளவுகள் அறிந்தனர் என்பதே இங்கு எழுதப்படுவது.

தொல்காப்பிய முதலிய பழைய தமிழ் நூல்களிலெல்லாம் கால அளவுப் பெயர்கள் காணப்படுகின்றன. நாழிகை என்ற சொல், தூய தனித்தமிழ்ச் சொல். பகல் என்ற தமிழ்ச்சொல் நாழிகை முதலாகப் பகுத்தலை பெறுவது என்ற பொருளைத் தரும். இங்ஙனமெல்லாம் பண்டைக்காலமுதலே தமிழர் கால அளவுகளைக் கண்டறிந்தனர் என்பதற்குரிய அடையாளங்கள் மிகப்பல.

இவ்வாறு மிகப்பழைய காலத்தேயே நம் நாட்டினர் கால நேரங்கள் அறிந்திருந்தனராயின், அவர்கள் கையாண்டுவந்த கருவிகள் யாவை? இரவு நேரத்தை விண்மீனைக் (நட்சத்திரத்தைக்) கொண்டு நாழிகையறிந்த விதங்களை முடிவில் எழுதுவோம். சிறிது ஏறத்தாழப் பகல் நாழிகை கண்டறிந்த எளியவான சில முறைகளை முன்னர் எழுதுவோம்.

க. சூரியன் ஒளி வெளிப்பட்டிருக்கின்ற காலத்தில் ஒரு சிறு ஈர்க்கை [சீவை] யாவது, மெல்லிய குச்சியையாவது 16-விரற்கடை அளவினதாக ஒடித்து வைத்துக்கொள்ளுதல் வேண்டும். பிறகு, வெய்யிலில்வந்து, நிழல்சாயும் பக்கமாக அக்குச்சியின் ஒருபாதி கீழே கிடக்கவும், மற்றோர்பாதி மேலே நிமிர்ந்து நேரே நிற்கவும், மெதுவாக ஒடித்து (இரண்டாக ஒடிந்து போ

நாமல்) நிமிர்ந்து நிற்கும் பகுதியின் நிழல் கீழே கிடக்கும் பகுதியில் விழும்படி அமைத்தல் வேண்டும். இந்த நிழல் கீழே கிடக்கும் பகுதியைவிட நீட்டமாகவோ குட்டையாகவோ இருக்கக் கூடுமாகையால், மேற்பகுதியின் நிழலும் கீழ்ப்பகுதியும் ஒன்றாக ஆகும்வரை, மேற்பகுதியிலோ, கீழ்ப்பகுதியிலோ மெதுவாக ஒடித்து ஒடித்து வந்து, வைத்துப் பார்த்து மேற்கூறியவாறு நேர்செய்து கொள்ளுதல் வேண்டும். பின் நேரே நின்றபகுதியை விரற்கடையில் அளந்துபார்க்க, வந்த விரற்கடை அளவே நாழிகையாகும். இந்த நாழிகை காலையாயின் கடந்த நாழிகையாகவும், மாலையாயின் பாக்கியிருக்கும் நாழிகையாகவும் கொள்ளல் வேண்டும். இதனை விளங்க எழுதுவதற்கு இவ்வளவு நீண்டதேயன்றி, இவ்வாறு அளப்பதற்கு ஒரு கணமும் ஆகாது.



இதனை

காட்டுத் துரும்பெடுத்துக் கண்டம்பதி னொருக்கி
நீட்டிக் கிடத்தஅங்கு நின்றதுவே நாழிகையாம்.

என்னும் அடிகளால் நினைவில் அமைத்துக் கொள்ளலாம்.

உ. வெய்யிலில் நிமிர்ந்து நின்று அடியை அளந்துபார்க்க, வந்த எண்ணினோடு ஐந்தினைக்கூட்டி, நூறை வகுக்க வரும் ஈவு காலையாயின் கடந்த நாழிகை; மாலையாயின் எஞ்சிநிற்கும் நாழிகை.

அடி அளவு—5; $5+5=10$; $100 \div 10=10$. காலையாயின் பத்துமணி; மாலையாயின் இரண்டுமணி.

இதனை 'அடியளந்து பாண்டவரைக் கூட்டித் துரியோதன முதலோரை வகுக்க வந்த ஈவு பகல் நாழிகை' என்பது நினை வூட்டும்.

௩. தேங்காய் நார்க்கயிற்றை நீளமாக எடுத்து அளந்து வைத்துக்கொண்டு, அதில் ஒரு முனையில் தீப்பற்ற வைத்து, அது ஒரு பகல் முழுவதும் எவ்வளவு தூரம் எரிந்திருக்கிறதென் பதை மிஞ்சியபகுதியால் தெரிந்துகொள்ளுதல்வேண்டும். இந்த அளவினையுடைய கயிறுகளை முப்பது நேர்பங்கான முடிச்சுக் களால் அடையாளமிட்டுக் கொண்டு தீப்பற்ற வைத்துவிட, எரிந்த பகுதியை மிஞ்சிய முடிச்சுக்களால் அறிந்து கடந்த நாழிகைகளை அறிந்தது ஒன்று.

மிஞ்சிய பகுதி எரிந்த பகுதி.

❁......❁.......❁......❁......❁......❁......❁.....................

மிஞ்சிய பகுதி ஏழாகலின் கடந்த நாழிகை இருபத்துமூன்று.

[இது பகலிலும் இரவிலும் பார்க்கத்தக்கது]

௪. ஒரு குச்சியை நிழற்சாயும் பக்கமாகச் சிறிது சாய்த்து நட்டு அந்த நிழல்செல்லும் பக்கத்தே, அரைவட்டத்தில் குறிக் கப்பட்ட நாழிகைக் கோடுகளால், நாழிகையறிதல் ஒன்று. இதற்குச் சூரிய கடிகாரம் என்று பெயர். இது மேனாட்டாரிட மிருந்து கற்றமுறை.



இக்கூறிய முறைகளும் இவைபோன்ற வேறுசில முறைகளும் இந்த நாட்டில் கையாளப்பட்டன. என்றாலும், இவைகளெல்லாம் நாழிகைகளைச் சற்று ஏறத்தாழக் காட்டக் கூடியன வேயன்றிக் கூர்மையாகக் காட்டக்கூடியன வல்ல. அங்ஙனம் கூர்மையாகக் காட்டக்கூடிய சில முறைகளும் இருந்தன. அவை அடுத்த இதழில் எழுதப்பெறும்.

இதழாசிரியர்.